விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 20 திங்கட்கிழமை (03.06.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 166

## மைத்திரியை ஜனாதிபதியாக்கி தவறிழைத்து விட்டோம்

ரணில் முன் மாவை எம்.பி ஆதங்கம்

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போது பொது வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தமை நாம் செய்த தவறாக எண்ணத்



23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டாலே இந்தியாவின் பாதுகாப்பு ஸ்திரமாகுமென்பதை மோடி அரசு புரிந்துள்ளது – சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் தெற்கத்தைய கடல்சார் பாதுகாப்பு இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் பின்னணியிலேயே தங்கியுள்ளது என்பதை இந்தியா உணரத் தொடங்கியுள்ளது. புதிய பிரதமர் மோடியின் இரண்டாவது ஆட்சிக்கால முதற் பயணம் மாலைதீவுக்கும் இலங்கைக்கும் அமைவது தற்செயலான ஒரு காரியமாக எனக்குப்படவில்லை. அதாவது தமிழர்களான எமது பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்த வேண்டிய ஒரு



23ஆம் பக்கம் பார்க்க....

## ரணில் – மகிந்த இன்று சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ இன்றைய தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்க தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பந்துல

24ஆம் பக்கம் பார்க்க....

## இன்று 12 மணிக்குள் மூவரையும் பதவி நீக்காவிட்டால்

# பிக்குகளின் போராட்டம் நாடு முழுவதும் வெடிக்கும்

## ஞானசார தேரர் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இன்று மதியம் 12 மணிக்குள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகிய மூவரையும் பதவியிலிருந்து அரசு நீக்காவிட்டால் நாடு முழுவதும் பிக்குகள் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும் என பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடை அத்தே ஞானசார தேரர் அரசுக்கு பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(விரிவான செய்தி 03ஆம் பக்கத்தில்)



## கொழும்பில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பின் புறநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## பயங்கரவாத எதிர்ப்பு சட்ட அறிக்கை

சபையில் இன்று சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இம்மாதம் இடம்பெறவுள்ள பாராளுமன்றத்தின் இரண்டாவது அமர்வின்போது பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பான சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் அறி

23ஆம் பக்கம் பார்க்க....

## ரயில் தண்டவாளத்தில் படுத்திருந்த ஒன்றரை வயது ஆண் குழந்தை

கொடிகாமம் நாவலடியில் பரபரப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் நாவலடிப் பகுதியில் ரயில் தண்டவாளத்தில் ஒன்றரை வயது ஆண்குழந்தை ஒன்று கிடப்பதைக் கண்ட கிராம அலுவலர், குழந்தையை தூக்கி உரியவர்களிடம் ஒப்படைத்துள்ளார். இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது

ரயில் தண்டவாளத்திலிருந்து 75 மீற்றர் தூரத்தில் உள்ள வீடொன்றிலிருந்து பெற்றோர்கள் இருக்கும் வேளையில் இந்த

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் தீர்வில் இருந்து அரசாங்கம் விலகவில்லை

பிரதமர் ரணில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு தேவையான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் விலகவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

## விசேட கட்சி தலைவர்கள் கூட்டம் இன்று

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இன்று காலை விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

பாராளுமன்றத்தைப் பிரதி

23ஆம் பக்கம் பார்க்க....

## பதவி விலகினார் ஹிஸ்புல்லாஹ்?

(கொழும்பு)

கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜனாதிபதி

23ஆம் பக்கம் பார்க்க....

## இராணுவ ஜீப் மோதியதில் ஒருவர் பரிதாபகரமாகப் பலி

வவுனியா நெடுங்கேணியில் துயரம்

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணியில் இராணுவ பிக்கப் வாகனம் துவிச்சக்கரவண்டியில் பயணித்தவரை மோதியதில் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது.

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் பல்வேறு நிகழ்வுகளில் பிரதமர் ரணில் பங்கேற்பு



03ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 21 ஆயிரம் சமுர்த்திப் பயனாளிகள் யாழ். மாவட்டத்தில் புதிதாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 21 ஆயிரத்து பதினொரு சமுர்த்திப் பயனாளிகளுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுக் காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ். மாநகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

யாழ். மாவட்டத்தை வறுமையில் இருந்து பாதுகாக்கும் நோக்குடன் செயற்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் அதிகமானோர் நன்மையடையவுள்ளனர்.

1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி நிவாரணம் தற்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் சலுகைகளை உள்ளடக்கிய விசேட திட்டமாக மக்களுக்கு கிடைக்கப்பெறுகிறது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை ஏறக்குறைய 73 ஆயிரம் சமுர்த்திப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான விசேட கடன் திட்டங்களும் நிதி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகளின் குடும்பத்தில் பல்கலைக்கழகம் செல்லும் பிள்ளைக்கு மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வீதம் இரு வருடங்களுக்கு வழங்கப்படும். இக் கொடுப்பனவு எதிர்வரும் காலத்தில் அதிகரிக்கப்படக் கூடியதாக உள்ளது.

மேலும் சுய தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ளவிருக்கும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு மிகக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கான நிவாரணத் திட்டத்தில் எதிர்காலத்தில் வட பகுதி மக்களை அதிகம் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (03,10)

# அவு. வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு வெளிவிவகார அமைச்சர் பீர் டட்ன் இன்று இலங்கை வரவுள்ளதாக இலங்கையிலுள்ள அந்நாட்டு உயர் ஸ்தானிகர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது அரசாங்கத்தின் உயர் மட்ட பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாத தாக்குதல் இடம்பெற்ற கிறிஸ்தவ ஆலயங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளதாகவும் காரியாலயம் கூறியுள்ளது. (03)


## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் முன்னாள் அதிபர்
திரு.சு.புண்ணியசீலன்
அவர்களின் அன்பு மனைவி

அமரர் யமுனா
புண்ணியசீலன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு நாமும் துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/ யூனியன் கல்லூரி
தெல்லிப்பளை

(C 6579)



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம் சகல காரியங்களும் வசியமுறைப்படி செய்து தரப்படும். (பின் விளைவுகள் எதுவும் ஏற்படாது) மூன்று பொழுதில் பலன்.

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) (9022)

றெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153,

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## றிஷாத், ஹிஸ்புல்லா, அசாத்தை பதவி விலக்கக்கோரி

# இந்து சம்மேளனமும் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தது

(கொழும்பு)

அகில இலங்கை இந்து சம்மேள னத்தின் தலைவர் நரா.அருண்காந்தி நேற்று (ஞாயிற்றுக் கிழமை) சுழற்சி முறையிலான உண்ணா விரத போராட்டம் ஒன்றை கண்டி, ஹலகா பலலேகல தோட்டத்தில் ஆரம்பித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல். எம். ஹிஸ்புல்லாஹ், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி மற்றும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோரை உடனடியாக கைது செய்து அவர்களிடம் விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே அவர் இந்த உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.



இலங்கை இந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை), காலை 8 மணிக்கு சம்மேளனத் தலைவர் நரா.அருண்காந்தி ஆரம்பித்த இந்த போராட்டத்தில் சம்மேளனத்தின் உறுப்பினர்கள் இந்து மத குருமார்கள் மற்றும் பௌத்த துறவிகள் கலந்துகொண்டனர். (03)

# மீண்டுமொரு வரலாற்றுத் தவறினை தமிழ் மக்கள் செய்யக் கூடாது

## விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை

வடக்கு கிழக்கு தமிழர்கள் கடந்த 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் சரியான தீர்மானம் எடுத்திருந்தால் எமக்கு இவ்வளவு இழப்புக்கள் வந்திருக்காது. எனவே இனியாவது தமிழர்கள் தங்களுக்கு பொருத்தமான தலைவரை எதிர் வரும் தேர்தல் ஊடாக தெரிவு செய்ய வேண்டுமென கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற சமுர்த்தி நிவாரண உறுதிப் பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (03)


## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 05.05.2019 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் ஆறுமுகராசா ரவீந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2019) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 04.06.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C-6581)

2-ம் வட்டாரம்,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் - 14.08.1950 மறைவு - 01.06.2019

எமது பிரதேச செயலகத்திற்குட்பட்ட J/394
பொலிகண்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில்
கிராம உத்தியோகத்தராக கடமையாற்றும்
ம.தர்ஷாந்தன் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் சிவசுப்பிரமணியஜயர் மகாதேவன்

அவர்கள் 01.06.2019 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் கண்ணீர் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேசசெயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.


(C-6580)


## பயங்கரவாதி சஹ்ரானுடன் தொடர்புடையவர்களை ஹிஸ்புல்லா காப்பாற்றிய காணொலி உள்ளது

# இன்று மதியம் 12 மணிக்குள்

# மூவரையும் பதவி நீக்கவும்!

## இல்லையேல் பாரிய விளைவுகள் ஏற்படும் ஞானசாரதேரர் பகிரங்க எச்சரிக்கை





(கண்டி)

**கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு ஹோட்டலில் இருந்து பயங்கரவாதி சஹ்ரானுடன் தொடர்பிலிருந்த மூவரைக் காப்பாற்றி, வான் ஒன்றில் கூட்டிச்செல்வது தொடர்பிலான காணொலியொன்று தன்னிடமுள்ளதாக பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.எனவே அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர்களான ஹிஸ் புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோரை இன்று மதியம் 12 மணிக்குள் ஜனாதிபதி பதவி நீக்கம் செய்யாவிடின், பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடுமென என அவர் பகிரங்க எச்சரிக்கை விடுத்தார்.**

கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அத்துரலிய ரத்ன தேரரை, நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நேரில் சென்று பார்வையிட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு எச்சரித்தார்.

"தற்போது இந்த விவகாரம் நாடளாவிய ரீதியாக விரிவடைந்து செல்கிறது. அனைத்துத் தரப்பினரும் இன்று ஒருமித்த கருத்துக்காகவும் நிலைப்பாட்டுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த மூன்று அரசியல்வாதிகளுக்காக தேரரின் உடல்நில்லையில் பாதிப்பொன்று ஏற்பட நான் என்றும் அனுமதிக்க மாட்டேன்.

எவ்வாறான பிரச்சினைகள் இருந்தாலும் நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும். இந்த பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிராக நாம் ஒன்றிணையாவிட்டால், இது இன்னும் நூறு வருடங்களுக்கு நீடிக்கும்.

எமது எதிர்காலச் சந்ததியினருக்கு அவ்வாறான ஒரு தேசத்தை நாம் வழங்கக்கூடாது. இன்று பிரான்ஸ், பாரிஸ், பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா, லண்டனில் இந்த பயங்கரவாதிகள் பாரிய அச்சுறுத்தலாக இருந்து வருகின்றனர்.

இவர்கள் இன்று எமது தாய் நாட்டிலும் காலடி எடுத்து வைத்துள்ளார்கள். சிறைச்சாலைக்குச் சென்ற எமக்கு, மரணமெல்லாம் ஒரு பொருட்டல்ல. எனவே, நாம் அரசாங்கத்துக்கு இன்று மதியம் 12 மணிவரை காலக்கெடு வழங்குகின்றோம். இதற்கான உரிய தீர்வை வழங்காவிட்டால் பாரிய விளைவுளை சந்திக்க நேரிடும் என்பதையும் நான் கூறிக்கொள்கின்றேன்.

கிழக்கு மாகாண ஆளுநரான ஹிஸ்புல்லா, கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு ஹோட்டலில் இருந்து சஹ்ரானுடன் தொடர்பிலிருந்த மூவரைக் காப்பாற்றி, வான் ஒன்றில் கூட்டிச்செல்வது தொடர்பிலான காணொலியொன்று என்னிடமுள்ளது.


இதனை வெளியிட்டு, தேவையில்லாத பிரச்சினைகள் ஏற்படும் முன்னர் இவர்களை ஜனாதிபதி உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கின்றோம்.அல்லது அவர்களே இராஜினாமா செய்ய வேண்டும். இவை அனைத்தும் இன்று மதியம் 12 மணிக்குள் இடம் பெறவேண்டும்" என மேலும் தெரிவித்தார். (இ-7)







## யாழில் வீடுகள் கையளிப்பு











**வடக்கு, கிழக்கு மீள்குடியேற்ற மறுவாழ்வு அமைச்சின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் பயனாளிகளிடம் கையளித்தார்.**

**யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நெடுங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் கட்டி முடிக்கப்பட்ட 5 கல் வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.இந் நிகழ்வில் அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரட்ன, தயா கமகே, கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, த.சித்தார்த்தன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்ட் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9-10)**

# அனைத்து அணிகளுக்கும் பவுன்சர் வைத்தியம் கொடுப்போம் - நைல்



உலகக்கிண்ணமுன்னு சொன்னாலே போதும் ஆஸ்திரேலியாவுக்கு அசுர பலம் வந்திடும். இதுவரை நடந்த 11 உலகக் கிண்ண தொடர்களில், 7 முறை பைனல். 5 முறை வேர்ல்டு கப் வின்னர். 1999 - 2007 வரை தொடர்ச்சியாக மூன்று முறை சம்பியன். இந்த முறையும் ஒரு வலுவான அணியாகத்தான் உலகக்கிண்ணத்துக்கு வந்துள்ளனர். கடந்தாண்டு கைப்புள்ள போல் இருந்த அணி திடீரென கட்டத் துரையாக மாறிவிட்டது. 2018 ஆரம்பம் என்னவோ ஆஸ்திரேலியாவுக்கு அட்ட காசமாகத் தான் இருந்தது. மார்ச் மாதம் வரை கெத்தா தான் இருந்தது ஆஸி... ஸ்மித், வார்னர், பேங்காராப்ட் 3 பேரும் பந்தை சேதப்படுத்திய புகாரில் சிக்கினார்கள். 3 பேரும் ஒருவருடம் சர்வதேச கிரிக் கெட்டில் விளையாடத் தடை விதிக்கப்பட் டது.


அதிரடிக்குப் பெயர் போன வார்னர், மிடில் ஆர்டரை தாங்கிய ஸ்மித் இருவர்கள் இல்லாததால் எல்லாம் தலைகீழாக மாறி யது. 'பேச்சாடா பேசுனிங்க' என்ற டோனில் மற்ற அணிகள் எல்லாம் ஆஸ்திரேலியாவை வெச்சு செய்தது. கோலி தலைமையிலான இந்திய அணியும் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த கெட்டதுலயும் ஒரு நல்ல விஷயமா ஆரோன்பின்ச், மெக்ஸ்வேல் போன்றவர்கள் தங்களது பழைய போர்மை மீட்டெடுத் தார்கள். எந்த மார்ச் மாதம் விதியை மாற்றியதோ சரியாக ஒரு வருடம் கழித்து அதே மாதத்தில் மீண்டும் விதியை மாற்றி எழுதினார்கள் ஆஸி வீரர்கள். இந்தியா வுக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப் பற்றியது ஆஸ்திரேலியா. கவாஜா, பின்ச், மேக்ஸ்வெல், டர்னர் எல்லாம் ஒரு காட்டு காட்டினார்கள். இந்தியாவுக்கு அடுத்தபடியாக பாகிஸ்தானை துவம்சம் செய்தார்கள்.

இந்த இடைவெளியில் ஸ்மித், வார்னரின் ஒரு வருட தடைக்காலமும் முடிந்தது. ஐ.பி.எல். போட்டியில் வார்னர் வெளுத்து வாங்கினார். இந்த உலகக்கிண்ண பயிற்சி போட்டியில் இங்கிலாந்து, இலங்கைக்கு எதிராக வெற்றி. பயிற்சி ஆட்டத்தில் ஸ்மித் ஒரு சதத்தை விளாசி போர்மை நிரூபித்தார். உலகக் கோப்பை போட்டியில் ஆப்கானிஸ் தானை நேற்று பதம் பார்த்தார்கள். வார் னர்.ஸ்மித் கம்பேக் ஆஸ்திரே லியாவுக்கு புது தெம்பை அளித்துள்ளது. அடுத்த போட்டியில் ஆஸ்திரேலியா அணி வெஸ்ட் இண்டீஸை எதிர்கொள்கிறார்கள்.

வெஸ்ட் இண்டீஸ் அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தானை 105 ரன்க ளுக்குள் சுருட்டியது. இந்தத்தொடரை வெஸ்ட் இண்டீஸ் அணி வெற்றிமுகத்துடன் துவங்கியுள்ளது. இந்த நிலையில் வெஸ்ட் இண்டீஸ் அணிக்கும் மற்ற அணிகளுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார் ஆஸ்திரேலியா வேகப்பந்துவீச்சாளர் கோல்டர் நைல். " மேற்கிந்திய தீவுகள் "அணிக்கு பவுன்சர் வைத்தியம் அளிக்க வேண்டும் இல்லை யென்றால் அவர்கள் இறங்கிவந்து மைதா னத்தில் நாலாபுறமும் பந்துகளை சிதற விடுவார்கள். அவர்களுக்குக் கண்டிப்பாக பவுன்சர் வைத்தியம் கொடுப்போம். மற்ற அணிகளுக்கு அதே சிகிச்சை அளிக்கக் காத்திருக்கிறோம். ஓவருக்கு 2 பவுன்சர்கள் தாராளமாக வரும். மேற்கு இந்திய தீவுகள் அணி பாகிஸ்தானுக்கு அளித்த சிகிச்சையை அவர்களுக்குத் தர காத்திருக்கிறோம்" என்கிறார் நைல்.

# இலங்கை மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக மட்டுமே வெல்லும் - மக்கலம்




உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் எந்தெந்த அணிகள் எத்தனை ஆட்டங்களில் வெற்றி பெறும் என்பது குறித்து, நியூசிலாந்து முன்னாள் கேப்டன் பிரன்டன் மக்கலம் ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளார்.

12-வது உலக கிண்ண கிரிக்கெட் போட்டியில் எந்தெந்த அணிகள் எத்தனை ஆட்டங்களில் வெற்றி பெறும் என்பதை நியூசிலாந்து முன்னாள் கேப்டன் பிரன்டன் மக்கலம் அலசி ஆராய்ந்து ஒரு பட்டியலை 'முகநூல்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இதன்படி 'நம்பர் ஒன்' அணியான இங்கிலாந்து அணி 9 லீக் ஆட்டங்களில் 8-ல் வெற்றி பெறும், ஆஸ்திரேலியாவிடம் மட்டும் தோற்கும் என்று ஆரூடம் சொல்லி உள்ளார். இந்திய அணியும் 8 ஆட்டங்களில் வெற்றிக் கனியை பறிக்கும், இங்கிலாந்திடம் மட்டும் தோல்வியை தழுவும் என்பது அவரது கணிப்பாகும்.

நடப்பு சம்பியன் ஆஸ்திரேலிய அணியை பொறுத்தவரை 6-ல் வெற்றியை வசப்ப டுத்தும். வெஸ்ட் இண்டீஸ், இந்தியா, பாகிஸ்தான் அணிகளிடம் 'சரண்' அடையும் என்று குறிப்பிட்டுள்ள பிரன்டன் மக்கலம், இங்கிலாந்து, இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் சிக்கலின்றி அரையிறுதியை எட்டும் என்கிறார்.

அரையிறுதிக்கான மற்றொரு இடத்திற்கு 4 அணிகள் முட்டிமோதும். அதாவது நியூசிலாந்து, வெஸ்ட் இண்டீஸ், தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் அணிகள் தலா 5 வெற்றி, 4 தோல்வியுடன் சமநிலையில் இருக்கும். அப்போது ரன்ரேட் அடிப்படையில் நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு தகுதி பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவரது பார்வையில் வங்காளதேசம் (இலங்கைக்கு எதிராக), இலங்கை (வெஸ்ட் இண்டீசுக்கு எதிராக) அணிகளுக்கு தலா ஒரு வெற்றி மட்டும் கிடைக்கும், ஆப்கா னிஸ்தான் 2 வெற்றி (இலங்கை, வங்காள தேசத்துக்கு எதிராக) பெறும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# விராட்கோலிக்கு காயம்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் அதிக கவனம் பெறும் வீரராக விராட் கோலி இருக்கிறார். இந்திய ரசிகர்களால் ரன் மெஷின் என அழைக்கப்படும் கோலி கடந்த சில ஆண்டுகளாக ஒரு நாள் போட்டிகளில் அற்புதமாகச் செயல்பட்டு வருகிறார்.

ஆசிய அணிகளில் வலுவான அணியாக இருப்பது இந்தியாதான். உலகக் கோப்பை வெல்லும் வாய்ப்பிருக்கும் அணியாகவும் கருதப்படுகிறது. இதன்காரணமாக வரும் ஜூன் 5-ம் திகதி இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதும் போட்டியைக் காண ரசிகர்கள் ஆவலாக உள்ளனர். இந்தப் போட்டிக்காக இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். சவுத் தாம்ப்டனில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த விராட் கோலிக்கு எதிர்பாராதவிதமாகக் கையில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. காயம் காரணமாக தொடர்ந்து பயிற்சியில் ஈடுபடாமல் ஓய்வறைக்குச் சென்று விட்டார். விராட்டின் காயம் குறித்து பி.சி.சி.ஐ. தரப் பிலிருந்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. கோலியின் காயம் ரசிகர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இருப் பினும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் கோலி களமிறங்குவார் எனத் தெரிகிறது.

# பொங்கியது பங்களாதேஷ் மங்கியது தென் ஆபிரிக்கா

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத்தில் தென் ஆபிரிக்காவை 21 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வங்காளதேஷ் அணி அபார வெற்றி பெற்றது.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் லண்டனில் நடைபெற்ற 5வது லீக் ஆட் டத்தில் தென் ஆபிரிக்கா, பங்காளதேஷ் அணிகள் மோதின. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்கா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

இதையடுத்து, பங்காளதேஷ் அணி களமிறங்கியது. அந்த அணியின் தமிம் இக்பால் 16 ரன்னிலும், சவுமியா சர்க்கார் 42 ரன்னிலும் அவுட்டாகினர்.

அடுத்து இறங்கிய ஷகிப் அல் ஹசன், முஷ்பிகுர் ரஹிம் ஜோடி நிலைத்து நின்று ஆடி 142 ரன்களை சேர்த்தது. ஷகிப் அல் ஹசன் 75 ரன்னிலும், மொகமது மிதுன் 21 ரன்னிலும், முஷ்பிகுர் ரஹிம் 78 ரன்னிலும் அவுட்டானார்.

இறுதியில், பங்காளதேஷ் அணி நிர் ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 330 ரன்களை எடுத்துள்ளது. மகமதுல்லா 46 ரன்னுடன் அவுட்டாகாமல் உள்ளார்.

தென் ஆபிரிக்கா அணி சார்பில் பெலுக்வாயோ, கிறீஸ் மாரிஸ், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த் தினர்.

இதையடுத்து, 331 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென் ஆப்பிரிக்கா அணி களம் இறங்கியது. குயிண்டன் டி காக் 23 ரன்னிலும், மார்கிராம் 45 ரன்னிலும், டேவிட் மில்லர் 38 ரன்னிலும், வான்டெர் துஸ்சென் 41 ரன்னிலும், பெலுக்வாயோ 8 ரன்னிலும், கிறிஸ் மாரிஸ் 10 ரன்னிலும் ஆட்டமிழந்தனர்.

கேப்டன் டு பிளசிஸ் மட்டும் ஓரளவு தாக்குப்பிடித்து விளையாடி அரைச் சத



மடித்தார். அவர் 62 ரன்னில் அவுட்டானார். டுமினி அணியின் வெற்றிக்காக போரா டினார். ஆனால் அவரையும் 45 ரன்னில் வெளியேற்றினர்.

இறுதியில், தென் ஆபிரிக்கா அணி 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 309 ரன் களை எடுத்தது. இதையடுத்து பங்கா ளதேஷ் அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பங்காளதேஷ் சார்பில் முஸ்தபிசுர் ரகுமான் 3 விக்கெட்டும், மொகமது சபுதின் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

# இராணுவ அதிகாரியாக செயற்பட்ட முஸ்லிம் நபர் அதிரடியாகக் கைது

(மொரட்டுவ)

இராணுவ அதிகாரி போன்று செயற்பட்ட சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் மொரட்டுவ - சொய்சாபுர பகுதியில் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ அதிகாரி போன்று உடையணிந்து செயற்பட்டு வந்த முஹம்மட் நிசார் இம்ரான் எனும் சந்தேகநபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

# கல்கிஸ்ஸ கடற்பகுதியில் கறுப்பு எண்ணெய்ப்படிமம்

(வெள்ளவத்தை )

வெள்ளவத்தை - கல்கிஸ்ஸ அண்டிய கடற்பகுதிகளில், கறுப்பு நிறத்திலான எண்ணெய் படிமங்கள் கலக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெள்ளவத்தை - கல்கிஸ்ஸ கடற்பகுதிகளில், கறுப்பு நிறத்திலான எண்ணெய்ப் படிமங்கள் கலக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், இதனால் குறித்த கடற்பகுதிகளுக்கு செல்வதைக் குறைத்துக் கொள்ளுமாறும் பொதுமக்களுக்கு கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (இ-7)

## பிரதமர் ரணில் எதிர்ப்பு

# அரச ஊழியர்களின் ஆடை குறித்த சுற்றறிக்கை இடைநிறுத்தம்

கடந்த 29ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச ஊழியர்களின் ஆடை தொடர்பான சுற்றறிக்கையை பொதுநிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்தது.

30 வருடங்கள் பழைமை வாய்ந்த குறித்த சுற்றறிக்கையை மீண்டும் அமுல்படுத்துவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து குறித்த சுற்றறிக்கை இடை நிறுத்தம் செய்துள்ளதாக பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

கடந்த 29 ஆம் திகதி வெளியான சுற்றறிக்கையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது கடமை நேரத்தில் அலுவலக வளாகத்திற்குள் வரும் போது ஆண் உத்தியோகத்தர்கள் காற்சட்டை மற்றும் மேற்சட்டை அல்லது தேசிய உடை அணிந்திருத்தல் வேண்டும் என்பதுடன் பெண் உத்தியோகத்தர்கள் சேலை அல்லது கண்டியச் சேலை (ஒஸரி) அணிந்திருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர். கார்த்திகேசு இரத்தினசபாபதி

(ஓய்வுநிலை சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (O.A.T) கட்டடங்கள் திணைக்களம்)

பிறப்பு 1944 • 02 • 14



இறப்பு 2019 • 05 • 04

கடந்த 04.05.2019 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கார்த்திகேசு இரத்தினசபாபதி அவர்களின் அந்தியேட்டி கிரியையும் சபிண்டீகரண நிகழ்வும் இன்று 03.06.2019 திங்கட்கிழமை அதிகாலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை தீர்த்தக்கரையில் கரைக்கப்பட்டது.

எமது குடும்பத்தலைவரின் இழப்பினால் துயருற்றிருந்தபோது உடன் வந்தோர்களுக்கும், தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்து ஆறுதல் தந்தவர்களுக்கும்,அமரருடன் சேவையாற்றிய கட்டட திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் ,பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், வங்கி உத்தியோகத்தர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏனைய நண்பர்களுக்கும் மற்றும் பதாகைகள், மலர்வளையங்கள் வைத்தோர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோர்கள், அஞ்சலி உரை நிகழ்த்திய அன்புள்ளங்கள், சகல வழிகளிலும் உதவி செய்தவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எதிர்வரும் 16.06.2019 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நிகழும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்பத்தினர் சகிதம் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (C-6578)

"லதாஸ்பிலேஸ்"
அத்திரான்,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.
077 285 0285



## 49 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 16.04.2019 செவ்வாய்க்கிழமை
சிவபதமடைந்த எமது குல விளக்கு

### அமரர் திருநாவுக்கரசு கண்ணன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.06.2019) திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது இழப்பு நடந்த நாளிலிருந்து சகல வழிகளிலும் எமக்கு உதவிய அனைவருக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஞான வைரவர் வீதி,
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

குடும்பத்தினர்.
T.P.:- 077 632 9667 (C-6556)


## இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி, சந் | செவ்,புத, ராகு |
| | | | |
| | | | |
| சனி, கேது | குரு | | |

03.06.2019
வைகாசி 20, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
அமாவாசை பிற்பகல் 4.15 மணிவரை
ரோகிணி பின்னிரவு 1.08 மணிவரை
சுபநேரம் 11.52 - 1.22 மணிவரை
இராகுகாலம் 7.22 - 8.52 மணிவரை
புதூர் நாகதம்பிரான் பொங்கல்
அமாவாசை விரதம்
வளவன்

**மீனம்:** பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இழுபறியாக இருந்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மேடம்:** வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையும் துணிவும் அதிகரிக்கும்.

**இடபம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** புதிய நட்பால் பொருள் விரயம் ஏற்படலாம், வியாபாரத்தில் மாற்றம் செய்ய முற்படுவீர்கள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், மனதில் தோன்றுவதை செய்வீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்:** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாட்டால குதூகலம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்:** சிறப்பான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**தனுசு:** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள், தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைச் தவிர்ப்பது நல்லது, மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


**கன்னி:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் குறைந்த செலவில் முடியலாம், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் மாறும், பாக்கிகள் வசூலாகலாம்.



வரணி - சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. (படங்கள்:-சுபேசன்)

# பயங்கரவாதத்திற்கு துணைபோனோர் கைது செய்யப்படுவர்

## பிரதமர் ரணில் உறுதி



(மாத்தளை)

**பயங்கரவாத எதிர்ப்பு வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு துணை புரிபவர்களைக் கைது செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

தனித்து செயற்படுவதனூடாக பயங்கரவாதப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. புலனாய்வுத்துறையினர் ஒன்றிணைந்து தீர்மானங்களை எடுப்பது அவசியமாகும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

மாத்தளை பிரதேசத்தில் இடம்பெற்ற "கிராமத்தை நோக்கிய அரச சேவை" வேலைத் திட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டே ஐ. எஸ்.பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் அமைகின்றன. ஐ.எஸ்.பயங்கரவாதத் தாக்குதல்கள் மீண்டும் நாட்டில் இடம்பெறாமல் தடுப்பதற்கு பயங்கரவாத எதிர்ப்பு வேலைத்திட்டங்களை வகுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். பயங்கரவாதத்தை தடைசெய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

இதேவேளை சஹ்ரானின் அனைத்து பயங்கரவாதச் செயற்பாடுகளும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பும் முடக்கப்பட்டுள்ளது. ஒருபிரச்சினை முடிவுக்கு வரும் போது இன்னொரு பிரச்சினை உருவாவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. மேலும் இது போன்ற பிரச்சினைகள் இணையத்தள வசதிகளால் பரவலடைவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஐ.எஸ்.ஐ. எஸ் பயங்கரவாதத் தாக்குதல்களால் ஏற்படக் கூடிய சவால்களை எதிர்கொண்டு அதன் செயற்பாடுகளை முழுமையாகக் கட்டுப்படுத்தக் வேண்டுமானால் பயங்கரவாத எதிர்ப்பு வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது அவசியமாகும். இதனை நடைமுறைப்படுத்துவதிலிருந்து எவராலும் தப்பிக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# முறைப்பாடு செய்தவர்களை கைது செய்வேனென மிரட்டிய பொலிஸ் பொறுப்பதிகாரி

## அநாகரிகம் என ஆணைக்குழுவில் புகார்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கச் சென்ற பிரதேசசபை உறுப்பினர் ஒருவரையும், பொதுமக்களையும் கைது செய்வேன் எனப் பொலிஸ் பொறுப்பதிகாரி மிரட்டியதாக பாதிக்கப்பட்ட மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனிடம் தெரிவித்தார்.

அண்மையில் மறவன்புலோ பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான கலந்துரையாடல் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற போதே பொதுமக்கள் இக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது பகுதியில் எம்மை அச்சமூட்டும் வகையில் அமைக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாடு ஒன்றை வழங்குவதற்காக அண்மையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு மக்கள் பிரதிநிதி ஒருவருடன் சென்றிருந்தோம். இதன்போது எமது முறைப்பாட்டை ஏற்க மறுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி எம்மை கைது செய்யப் போவதாக வும், இங்கிருந்து செல்லுமாறும் மிரட்டியிருந்தார். பொலிஸ் அதிகாரியின் அநாகரிகமான செயற்பாடு தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவிடம் எழுத்து மூலமாக முறையிட்டிருந்தோம்.

அதன் பின்னர் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் பொலிஸார் விசாரணைக்காக எனது வீட்டிற்கு வந்தனர். முறைப்பாடு வழங்கியவர்களை விசாரணைக்கு அழைப்பது எந்தவகையில் நியாயம். இது எம்மை அச்சப்படுத்தும் செயல் என அவர்கள் மேலும் தெரிவித்தனர். குறித்த கலந்துரையாடல்சாவகச்சேரி பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதே பொதுமக்கள் பொலிஸார் முன்னிலையில் பொலிஸ் அதிகாரியின் செயற்பாடு தொடர்பாக முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இருப்பினும் கலந்துரையாடலில் மக்கள் குற்றம்சாட்டிய பொலிஸ் பொறுப்பதிகாரி கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# தேர்த் திருவிழாவில் திருட வந்ததாக நால்வர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

வரணி சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம்இடம்பெற்றபோது திருடுவதற்காக வருகை தந்த நால்வர் மக்களால் இனங் கண்டு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மூன்று பெண்களும் ஆண் ஒருவரும் திருடுவதற்காக வந்திருந்தார்கள் எனவும் திருட்டு முயற்சி சரிவராது என்பதை அறிந்த நான்கு பேரும் ஒரு பிள்ளையை கூட்டி வந்திருந்தனர். உடனே தமது பிள்ளைக்கு சுகமில்லை நேர்த்திக் கடன் நிறைவேற்ற வந்ததாக கூறி அலகு குத்தி (வாயில் முள்) பாற்செம்பை தலையில் வைத்துக் கொண்டு நேர்த்தி செய்து நேர்த்தியை நிறைவு செய்யும் இடத்தில் பணம் சேர்த்தனர். அப்போது ஏன் பணம் சேர்க்கிறீர்கள் என்று கேட்டபோது இந்தக் கோவிலுக்கு தான் சேர்க்கிறோம் நேர்த்தி செய்ய என்று கூறியுள்ளனர்.

பணம் வழங்கிய பக்தர்களுக்கு சந்தேகம் ஏற்படவே உடனடியாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். நால்வரையும் அவர்களுடன் வருகை தந்த பெண் பிள்ளையால் சேகரிக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் என்பவற்றை கொடிகாமம்பொலிஸ்நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

பதுளையைச் சேர்ந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மானிப்பாயைச் சேர்ந்த இரண்டு பெண்களும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# அம்பாளின் அலங்கார உற்சவம்

யாழ்.சரவணை மேற்கு இரண்டாம் வட்டாரத்திலுள்ள ஸ்ரீ அருள் வரதகாளி அம்பாளின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்த அலங்கார உற்சவம் தொடர்ந்து 13 நாட்கள் நடைபெறுவதோடு, எதிர்வரும் 25 ஆம் திகதி 1008 சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. திருவிழாக் காலங்களின் போது தினமும் முற்பகல் 11 மணியளவில் வசந்த மண்டப பூசையைத்தொடர்ந்து, உள், வெளி வீதிகளில் அம்பாள் உலாவரும் காட்சியும் இடம் பெறும். (இ-7)

# ஆதரவுக்கு நன்றி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தை வியாபாரிகளால் கடந்த 29 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவளித்த வர்த்தக சங்க நிர்வாகத்தினர் மற்றும் வர்த்தகர்களுக்கு சந்தை வியாபாரிகள் நன்றியைத் தெரிவித்தனர்.

கடந்த 29 ஆம் சாவகச்சேரி சந்தையை குத்தகைக்கு வழங்குவது என்ற நகரசபையினரின் தீர்மானத்தைக் கண்டித்து சந்தை வியாபாரிகள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு வர்த்தக சங்கத்தினரும் கடைகளைப் பூட்டி பூரண ஆதரவு வழங்கியிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-30)

# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் பாடசாலைகளுக்கு மரக்கன்றுகள்

(யாழ்ப்பாணம்)

உலக சுற்றுச்சூழல் தினத்தை (ஜூன்-05) முன்னிட்டு மர நடுகையில் ஈடுபடுகின்ற பாடசாலைகள் சமுத்திரக்காய் மரமொன்றையும் நடுகை செய்ய விரும்பின் அதனைத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்திடம் பெற்றுக்கொள்ளலாம்.

சமுத்திரக்காய் அல்லது சமுத்திரப்பாலை (Barringtonia) என்று அழைக்கப்படும் இம் மரம் நடுத்தர உயரம் கொண்டது. இது கடற்கரையோரங்களை அண்டிய கண்டற் சூழலுக்கு உரியது.

எனினும், எல்லா வகையான மண்ணிலும் செழித்து வளரக் கூடியதும் ஆகும். யாழ் குடாநாட்டிலிருந்து அழிந்து வருகின்ற இந்த மரத்தைப் பெருக்கும் நோக்குடனும், மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடனும் நாற்று மேடையில் பராமரிக்கப்பட்ட இம் மர கன்றுகளில் தேவைப்படும் பாட சாலைகளுக்கு ஒவ்வொரு மரக் கன்றினை வழங்குவது எனத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தீர்மானித்துள்ளது.

அதிபர் அல்லது பிரதி அதிபரின் வேண்டுகைக் கடிதத்துடன் வருகின்ற பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த எவரும் இல : 109, அரசடிவீதி, கந்தர்மடம் என்ற முகவரியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் இதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

திங்கள் (03.06.2019), செவ்வாய் (04.06.2019) ஆகிய தினங்களில் மட்டும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையில் மரக்கன்றுகளின் விநியோகம் இடம் பெறும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 077 947 6344 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம். (இ-7)

# அத்துரலிய ரத்ன தேரரின் போராட்டத்திற்கு பூரண ஆதரவு

## ஜனநாயக இடதுசாரி முன்னணி



(கொழும்பு)

தேசிய நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையிலே மேல்மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் செயற்படுகின்றார்கள்.

இதன் காரணமாகவே பெரும்பாலான எதிர்ப்புக்கள் இன்று தோற்றம் பெற்றுள்ளன. எனவே அத்துரலிய ரத்னதேரரின் போராட்டத்திற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.(இ-7)

# பொலிஸார்-சந்தேக நபர் இடையே துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி!

## தென்னிலங்கையில் பரபரப்பு

(கொழும்பு)

**தென்னிலங்கையில் பொலிஸாருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார். பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபரே இவ்வாறு நேற்று அதி காலையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

அக்குரெஸ்ஸ, ஊருபொக்க பிர தேசத்தில் நேற்று அதிகாலை பொலிஸாருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் துப்பாக்கி மோதல் ஏற்பட்டது.

கடந்த மாதம் 22ஆம் திகதி அக்குரெஸ்ஸ பிரதேசத்தில் சுற்றி வளைப்பிற்கு சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரே நேற்றத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் உயிரிழந்ததாக பொலிஸ் ஊடக பேச்சாளர் ருவான் குணசேகர



தெரிவித்தார்.

சந்தேக நபரை நேற்று அதி காலை 2.50 மணியளவில் கைது செய்வதற்காக பொலிஸ் குழு ஒன்று சென்றது.

இதன்போது சந்தேக நபர் மற்றுமொரு பொலிஸ் அதிகாரி மீது துப்பாக்கி பிரயோகம் மேற் கொண்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குண சேகர தெரிவித்தார்.

இதன்போது பொலிஸார் மேற் கொண்ட பதில் துப்பாக்கி பிரயோ கத்தில் சந்தேகநபர் உயிரிழந் தார்.

உயிரிழந்த சந்தேகநபர் 56 வயதானவர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித் தார். (இ-7)


## யாழ்.வணிகர் கழகம் வருடாந்த பொதுக்கூட்டம்

2019 ஆம் வருடத்திற்கான வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நடைபெறவுள்ளது.

திகதி :- 29.06.2019 சனிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- யாழ்.வணிகர் கழகப் பணிமனை

(C-6561)

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்
யாழ்.வணிகர் கழகம்.



## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

உயர்திரு
### சிவஞானசுந்தரம் சிவசேகரம்

(உரிமையாளர், ரூபின்ஸ் கட்டட நிர்மாணம், தலைவர், ரூபின்ஸ் மருத்துவமனை (பிறைவேட் லிமிற்றட்) நெல்லியடி



03.06.2019 இன்று அகவை அறுபதில் மணிவிழாக் காணும்
திரு.சி.சிவசேகரமும் அவர் தம் துணைவியார் திருமதி வசந்தி சிவசேகரமும்
இன்னும் பல்லாண்டு, சிறப்போடு வாழ்ந்து வளம் பெறுக.

ஆகமவிதிமுறை ஆலயம் பல அமைப்போன்
வாஸ்து வளம்பெற இல்லிடம் தந்தோன்
எம்மவர் நலம்பெற நல்மருத்துவமளிப்போன்
எடுத்த கருமம் சிறப்புற முடிப்போன்
காலத்திற்கேற்ற கருமத்திருதி நல்லறத்தோடு இல்லறம் ஓங்க
பல்லாண்டு வாழ்ந்து பயன்பல பெறுக என மனமார வாழ்த்தும்

(C-6566)

முடக்காடு,நெல்லியடி.

திரு.திருமதி மனோராஜ்
குடும்பத்தினர்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 48 சூரி செவ் 12 இல்
உயரம்: 5'5''
தகைமை/தொழில்IT பட்டதாரி, IT Engineer, Swiss
எதிர்பார்ப்பு: பட்டதாரி, ஆங்கிலஅறிவு
(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: B/9715

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா: 31 செவ் 4 இல்
உயரம்: 5'5''
தகைமை/தொழில்:A/L,வியாபாரம்
எதிர்பார்ப்பு: உள்நாடு
தொ.இ: B/9720

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:O/L,சொந்ததொழில்
எதிர்பார்ப்பு: O/Lபடித்தபெண் (உள்நாடு)
தொ.இ: B/9722

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பரணி 3
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L, தனியார்தொழில்
எதிர்பார்ப்பு: O/Lபடித்தபெண் (உள்நாடு)
தொ.இ: B/9723

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்திராடம் 3
உயரம்: 5'4''
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்ததொழில்
(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9729

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 ½ சூரி செவ் 10 இல்
உயரம்: 5'2''
தகைமை/தொழில்:B.Com, HNDA, அபிவிருத்திஉத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அரசதனியார் சொந்ததொழில்.
(உள்நாடு)
தொ.இ: G/9730

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம் 4
கி.பா: 60
உயரம்: 5'
தகைமை/தொழில்:Ger many
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும். பெண் Germany இல் பிறந்தவர்.
தொ.இ: G/9731

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: செவ் 2 இல்
உயரம்: 5'6''
தகைமை/தொழில்:A/L,முன்பள்ளி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரசதனியார் தொழில்
(உள்நாடு,வெளிநாடு)
தொ.இ: G/9732

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# இலங்கையை தமிழர் தேசம் என இந்தியா அறிவிக்க வேண்டும்

## சீமான் கோரிக்கை



(சென்னை)

இராமர் பாலத்தை இந்திய தேசிய சின்னமென அறிவிக்கும் முன்னர் இலங்கையை தமிழர் தேசமென அறிவிக்க வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தினார்.

அத்துடன் கொஞ்சம் இரத்தம் தாருங்கள் முழு சுதந்திரம் தருகின்றேன் என்று கூறிய சுபாஷ் சந்திரபோஸை முன்னோடியாக எடுத்துக்கொண்டு, நாங்கள் நிறைய இரத்தத்தை தந்துவிட்டோம் கொஞ்சம் சுதந்திரம் தாருங்கள் என்றே பிரபாகரனும் போராடுவதற்கு வந்தாரெனவும் சீமான் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்னையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே சீமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்களை இரண்டாம் தர குடிமக்கள் ஆக்கியமையினாலேயே ஈழப் போராட்டம் தோற்றம் பெற்றது. நாங்கள் பூர்வீகக் குடிகள். நான் கூட இராமர் பாலத்தை இந்திய தேசிய சின்னமாக அறிவிக்க வேண்டுமென்று கூறினேன். அதற்கு அனைவரும் ஆதரவு தெரிவித்தனர்.

குறித்த செயற்பாட்டுக்கு முன்னர் இராமர் பாலம் எதற்காகக் கட்டப்பட்டது என்பதை மக்கள் தான் கூற வேண்டும். அதாவது இராவணனை அழிப்பதற்காக இலங்கைக்கு செல்லவே குறித்த பாலம் கட்டப்பட்டது.

இவ்வாறு தமிழ் மன்னனான இராவணன் இலங்கையை ஆட்சி செய்ததன் ஊடாக இலங்கைத் தமிழர்களுக்கு உரித்துடையதென்பது உறுதியாகின்றது.

எமது பரம்பரையினர் ஆண்ட நாடுதான் இலங்கை. பண்டார வன்னியன் ஆண்ட காரணத்தினாலேயே வன்னிகாடு என்ற பெயர்கூட இன்னும் காணப்படுகின்றது.

பண்டார வன்னியனுக்கு சிலை வைத்து அவனை போற்றினார் எமது தலைவர். ஆனால் அச்சிலையை உடைத்து பெரும்பான்மையினர் தரைமட்டமாக்கினர்.

ஆனால் விழுந்த சிலை எழாது என்று கூற முடியாது. தமிழர் பிரதேசத்துக்கு வாழ்வாதாரத்துக்கு வந்த பெரும்பான்மையினர் அதனை கைப்பற்றவே முனைகின்றனர்.

தமிழ் மக்களை இரண்டாம் குடிகளாகவே இலங்கையிலுள்ள பெரும்பான்மையினர் நடத்த முனைகின்றனர். இந்தியாவிலும் இரண்டாம் தர குடியினராக கூட தமிழ் மக்களை கருதுவதில்லை. இந்திய பேரதிக்கம் தமிழர்களை இந்திய குடிகளாக கூட மதிப்பதில்லை.

அடிமையாக வாழ்வதனைக் காட்டிலும் உரிமை சாவு மேலானதென கருதிய தலைவர் பிரபாகரனை பயங்கரவாதி, தீவிரவாதி, பிரிவினைவாதி என உலகத்திலுள்ள ஏனைய புரட்சியாளர்களை கூறியதை போன்றே இந்த உலகம் கூறியது.

ஆகையால் இராமர் பாலத்தை இந்திய தேசிய சின்னமென அறிவிக்கும் முன்னர் இலங்கையை தமிழர் தேசம் என அறிவிக்க வேண்டும்.

இதேவேளை, மக்களுக்குத் தீங்கு செய்பவர்கள் ஆட்சியிலிருந்து வீழ்த்தப்பட்டு மக்கள் அதிகாரத்தை பெறும் காலம் விரைவில் வரும்" என சீமான் நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# ரத்ன தேரரின் கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை- தயாசிறி



(கொழும்பு)

அத்துரலிய ரத்ன தேரரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எல்லைமீறி செயற்பட வேண்டாம் என ஆளுநர்களுக்கு நாம் பல தடவைகள் அறிவிப்பு விடுத்தோம். ஆனால், அவர்கள் செவி மடுக்கவில்லை.

இதனால், நாட்டில் தற்போது பெரும் சர்ச்சை உருவெடுத்துள்ளது. இந்த நிலையில் கூட அவர்கள் ஊடகங்களுக்கு விடுக்கும் அறிவிப்புக்களை நிறுத்தவில்லை.

அதேவேளை, பயங்கரவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பவர்களுக்கு அதியுச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் இருக்கின்றோம்.

எனவே, ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுமானால் அவருக்கும் இக்கோட்பாடு பொருந்தும் எனத் தெரிவித்தார். (இ-7)

# சஹ்ரானுக்கு நெருக்கமான பொறியியலாளர் கைது!

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பிற்கு நிதி வழங்கினார் எனத் தெரிவித்து நசூர்தீன் என்ற பொறியியலாளரை தெஹிவளை கவ்டானயில் வைத்து கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஹொரவப்பொத்தான, கெப்பற்றிகொல்லாவ எல்லேவ, பத்தேவ பகுதிகளில் பள்ளிவாசல்களை நிர்மாணித்தார் என்று கூறி சிலர் வழங்கிய தகவலையடுத்து இவர் கைது செய்யப்பட்டார்.

சவுதியில் நீண்ட காலம் பொறியியலாளராக பணியாற்றிய இவர் பள்ளிவாசல்களை நிர்மாணிக்க பணம் பெற்றது எப்படி என்பது குறித்து விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

சஹ்ரானின் சகா அபூபக்கர் என்பவருடன் இவர் தொடர்பில் இருந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வைத்தியர் ஷாபி குறித்த விசாரணைகளில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது

## ஜே.வி.பி. எம்.பி.பிமல் வலியுறுத்து



கைது செய்யப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் செய்கு சியாப்தீன் மொஹமட் ஷாபி தொடர்பான விசாரணைகளில் அரசியல் தலையீடுகள் இருக்கக்கூடாது என ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்ட, அதன் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

குறித்த வைத்தியர் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் சுயாதீனமாகவும் பக்கச் சார்பின்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார். (இ-7)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

# மூவரடங்கிய விசாரணை சபையின் அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்காக, நியமிக்கப்பட்ட மூவரடங்கிய விசாரணை சபையின் அறிக்கை அடுத்த வாரமளவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பான சாட்சிகளை விசாரிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்திருப்பதாகவும் அந்தச் சாட்சிகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி அதன் இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணை சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விசாரணைச் சபையின் தலைவராக உயர்நீதிமன்றத்தின் நீதியரசர் விஜித் மலல்கொடவும் உறுப்பினர்களாக முன்னாள் பொலிஸ்மா அதிபர் எம்.கே. இலங்ககோன், முன்னாள் அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்டனர்.

இந்தச் சபையின் இடைக்கால அறிக்கைகள் 2 முன்னதாகவே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில், இதன் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் அடுத்த வாரம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# இராணுவச்சீருடை, ட்ரோன் வாள்களுடன் ஒருவர் கைது

மொரட்டுவ - கல்கிஸ்ஸ பகுதியில் குண்டுத்தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுடன் இணைந்து செயற்பட்டார் என்ற சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

மொரட்டுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சொய்சாபுர - குடியிருப்புத் தொகுதியில் நேற்று முன்தினம் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

சொய்சாபுர பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய முகமது நிசார் ஹகமட் இம்ரான் என்பவரே கைது செய்யப்பட்டதுடன், இவரிடமிருந்து இராணுவத்தினரின் சீருடைகளும், வாள்கள், தொலைபேசி, ட்ரோன் கமரா, மடிக்கணனி உட்பட மேலும் பல பொருட்களும் மீட்கப்பட்டன. (இ-7)

# சர்ச்சைக்குரிய முஸ்லிம் தலைவர்கள் குறித்து இன்று முக்கிய தீர்மானம் - மனோ நம்பிக்கை



(கொழும்பு)

சர்ச்சைக்குரிய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் குறித்து இன்று திங்கட்கிழமை முக்கிய தீர்மானம் எடுக்கப்படும் என அமைச்சர் மனோ கணேசன் நம்பிக்கை வெளியிட்டார்.

ரிசாத் பதியுதீன், அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் குறித்து கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை வலுப்பெற்று வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் அது இன்னும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் அசாத் சாலி, ஹிஸ்புல்லா, ரிசாத் பதியுதீன் ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தி கண்டியில் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரத்ன தேரருக்கு ஆதரவாக கடையடைப்புப் போராட்டம்

## முஸ்லிம் மக்களும் களத்தில்

(மாத்தளை)

**அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து மாத்தளை, ரத்தோட்டை நகரில் நேற்றுக் கடையடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன், தனியார் பேருந்து உரிமையாளர்களும் சேவையிலிருந்து விலகி, தேரருக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.**

அமைச்சர் றிசாத் பதியுதீன், ஆளுநர்களான அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகிய மூவரையும் உடனடியாக பதவி நீக்குமாறு கோரி அத்துரலிய ரத்ன தேரரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

இந்நிலையில் அவருக்கு ஆதரவு தெரிவித்து நாட்டின் பல பகுதிகளிலும் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனோர் அங்கமாகவே ரத்தோட்டை நகரில் நேற்று அனைத்துக் கடைகளையும் மூடி முஸ்லிம்கள் உட்பட மூவின மக்களும் வீதியில் இறங்கி, அடிப்படைவாதிகளை உடன் கைது செய்யுமாறு வலியுறுத்தினர். (இ-7)

# கோத்தாவுக்கு எதிராகக் களமிறங்கும் வேட்பாளரைக் கட்சிக்குள் தேடும் ஐ.தே.க.

(கொழும்பு)


இந்த ஆண்டின் இறுதிப்பகுதி அதாவது டிசெம்பரில் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளராக தனது கட்சி சார்ந்தவர் ஒருவரையே நிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்தது.

வேட்பாளர் தமது கட்சிக்குள்ளேயே இருக்க வேண்டும் எனவும் வேறு வெளி வேட்பாளர்களை நிறுத்த அனுமதிக்கப் போவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு திட்டவட்டமாக அறிவித்தது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷான் விதானகே தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி வேட்பாளர் கட்சியை சாராதவர் என வதந்திகள் இருந்தாலும் அவை உண்மைக்குப் புறம்பானவை என அவர் தெரிவித்தார்.

இதனை உறுதிப்படுத்தும் முகமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணாவும் ஜனாதிபதி வேட்பாளர் தங்கள் கட்சியை சேர்ந்தவர் ஒருவரே என்று தெரிவித்தார்.

அந்தவகையில் ஜனாதிபதி வேட்பாளராக ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ அல்லது சபாநாயகர் கரு ஜெயசூரிய இவர்களில் ஒருவர் தான் ஜனாதிபதி வேட்பாளர் என அவர் தெரிவித்தார்.



மேலும் தமிக்க பெரேரா குறித்து வினவியபோது. "அவர் அரசாங்கத்தின் ஒரு அங்கமாக இருப்பார் என்றும் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளராக அவர் நியமிக்கப்படமாட்டார்" என்றும் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் வேட்பாளரைக் களமிறக்குவது சாத்தியமில்லை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

"ஐ.தே.மு. கூட்டணியின் கட்சியிலிருந்து வேட்பாளரை நிறுத்திவிட முடியும் என்றாலும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அதனை விரும்பவில்லை" என மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஏற்கனவே எதிர்க்கட்சி தரப்பில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட கோத்தபாய ராஜபக்ஷ தயாராகி வருகின்றார். இதற்காக அவர் அமெரிக்கக் குடியுரிமையும் துறந்தார் என அண்மையில் தெரிவித்தார்.

இருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிகளுக்கிடையில் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றமையால் வேட்பாளர் தொடர்பாக உத்தியோகபூர்வமாக அறிவிப்பு வெளியாகவில்லை.

இந்நிலையில் பொதுவேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ என உத்தியோகபூர்வமாக அறிவிக்காத நிலையில்கூட ஐக்கிய தேசியக் கட்சியும் தனது வேட்பாளர்கள் தொடர்பாக அதிக அக்கறை செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பதற்றத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஜாதிக ஹெல உறுமய

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை இல்லாமல் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கோரியுள்ளது.

அவ்வமைப்பு விடுத்துள்ள விசேட அறிவித்தல் ஒன்றிலேயே இதனைக் கூறியுள்ளது.

அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் ஆளுநர்களான அசாத் சாலி, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஆகியோரை பதவி நீக்க வேண்டும் என நாடு முழுவதும் மக்கள் கருத்தொன்று உருவாகியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரின் உண்ணாவிரதப் போராட்டமும் இதன் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த அறிவித்தலில் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்ந்தும் நிலவும் வரை பார்த்திருந்தால், கண்டியில் மாத்திரமன்றி, நாடு முழுவதும் உண்ணாவிரதம் எதிர்ப்புப் போராட்டங்கள் என்றும் ஆரம்பிக்கப்பட்டு, சமூகத்தில் நிலவும் சமாதான சூழ்நிலை இல்லாமல் போக வழியேற்படும் எனவும் ஜாதிக ஹெல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

இதனால், ஜனாதிபதி தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஆளுநர்கள் தொடர்பிலும் அமைச்சர் குறித்தும் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குளவிக்கொட்டுக்கிலக்கான 21 தொழிலாளர்கள் பாதிப்பு

(ஹற்றன்)

மலையகத்தில் இருவேறு இடங்களில் நேற்றுக் காலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது குளவிக் கொட்டியதில் 21 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வட்டவளை வெலிஓயா தோட்டத்தில், கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 12 பேரும், கொட்டகலை டிரேட்டன் தோட்டத்தில் தேயிலை மலையில் பணியில் இருந்த 9 தொழிலாளர்களும் இவ்வாறு குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

வட்டவளை வெலிஓயா தோட்டத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பெண் தொழிலாளி கர்ப்பிணி எனவும் பாதிக்கப்பட்ட 12 பேரும் பெண் தொழிலாளர்கள் எனவும் அவர்கள் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ. பிரிவில் குளவிக் கொட்டுக்கு இலக்காகியவர்களில் 7 பேர் பெண் தொழிலாளர்கள் எனவும், இரண்டு பேர் ஆண் தொழிலாளர்கள் எனவும் தெரிவித்த வைத்தியசாலை வட்டாரங்கள், 9 பேரில் 4 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாகவும் இதில் ஒரு பெண் தொழிலாளியின் நிலைமை கவலைக்கிடமான நிலையில் இருந்ததன் காரணமாக குறித்த பெண் தொழிலாளி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-7)

# இராணுவச் சிப்பாய் சடலமாக மீட்பு

(வெலிகம)

வெலிகம பகுதியில் ஆறொன்றில் பாய்ந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெனிபிடிய-பொல்வத்து மோதர ஆற்றில் வீழ்ந்து நபரொருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன் பின்னரும் பொலிஸாரும் கடற்படையின் சுழியோடிகளும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் பின்னர் காணாமல்போன நபர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளில் வெல்லான பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய வன்னியாரச்சிகே சுபுன் புத்திக எனப்படும் இராணுவச் சிப்பாய் என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



யாழ்.மாவட்ட படப்பிடிப்பு தொழில் சார்ந்த அனைவரையும் இணைத்து புதிய அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. நேற்றுக் காலை 9.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் ஒன்று கூடலுடன் ஆரம்பமான இந் நிகழ்வில் மூத்த படப்பிடிப்பு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# ஜனாதிபதியாக தமிழர் வந்தாலும் எமக்கு தீர்வு கிடைக்காது

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆதங்கம்

இலங்கையின் ஜனாதிபதியாக தமிழர் ஒருவர் பதவியேற்றாலும் தமக்கான தீர்வு கிடைக்கப்போவதில்லையென காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

காணாமலாக்கப்பட்ட உறவினர்களின் 8 மாவட்டங்களுக்கான தலைவர், செயலாளர் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இடம்பெற்றது.

இந்த கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே கிளிநொச்சி மாவட்ட செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா மேற்படி தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,இலங்கையின் ஜனாதிபதியாக யார் வந்தாலும் தமக்கு நீதி கிடைக்கப்போவதில்லை. கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன எமது உறவுகளை கண்டறிந்து தருவாரென தமிழ் தலைமைகள் கூறியதால் எமக்கிருந்த நப்பாசையினாலே அவருக்கு வாக்களித்தோம்.

எனினும் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் அவரும் எம்மை ஏமாற்றிவிட்டார்.

அதேபோலவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்த விடயத்தை மறப்போம் மன்னிப்போமென தெரிவித்து விட்டதாகவும் இதனால் இனிமேல் சிங்கள தலைவர்கள் மாத்திரமல்ல தமிழர்கள் ஜனாதிபதியாக வந்தாலும் அவர்களை நம்ப தாம் தயாராக இல்லையெனவும் மேலும் தெரிவித்தனர். (9)

# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் படுகாயம்

வவுனியா அட்டமஸ்கட பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா அட்டமஸ்கட பகுதியிலுள்ள காட்டுப்பகுதிக்கு தேன் எடுப்பதற்காக நேற்று காலை 6மணியளவில் சென்றுள்ளார். அப்போது விலங்கு வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் அப்பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய குடும்பஸ்தர் படுகாயத்திற்குள்ளாகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அவ் இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (9)

# நிதி ஒதுக்கப்பட்டு ஒரு வருடமாகியும் யானை வேலி அமைக்கப்படவில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

புதுக்குடியிருப்புப்பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யானை வேலி அமைப்பதற்கு கடந்த 2018 ஆம் ஆண்டு வன ஜீவராசிகள் திணைக்களத்தால் 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டும் பிரதேச அதிகாரிகளின் அக்கறையின்மையால் இதுவரை குறித்த வேலி அமைக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

புதுக்குடியிருப்புப்பிரதேச செயலகத்துக்குட்பட்ட கல்மடுக்குளம் தொடக்கம் இடைக்காட்டுக் குளம் வரையிலான 16 கிலோ மீற்றர் வரையான பகுதி யானை வேலி அமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

குறித்த பகுதிகளில் வாழும் மக்களின் பிரதான வாழ்வாதாரச் செய்கையாக தெங்குப் பயிர் செய்கை காணப்படுவதால் குறித்த பகுதியில் யானை வேலி அமைத்தால் மட்டுமே தென்னை நாற்றுக்களை வழங்க முடியும் எனத் தெங்குப் பயிர்செய்கைச் சபை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதி மக்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாமல் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக வருத்தம் தெரிவித்துள்ளனர். இவ் விடயம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் ம.பிரதீபனைத் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த திட்டம் கமநல சேவைகள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் அவர்களிடம் கேட்குமாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் புனிதகுமாரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த திட்டம் கடந்த 2018 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது ஏன் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்பது தொடர்பாக தனக்கு ஏதும் தெரியாதெனவும் தான் புதிதாகக் கடமையேற்றுள்ளதாகவும் குறித்த யானை வேலி அமைப்பது தொடர்பில் அப்பகுதி மக்களை இணைத்து குறித்த திட்டத்தை செய்ய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். ஆணையாளரின் கருத்துத் தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கும் போது, யானை வேலி அமைப்பது தொடர்பாகத் தொழில்நுட்பக்கருவிகள் தம்மிடம் இல்லை எனவும் ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து ஒப்பந்த நிறுவனங்களை இணைத்துச் செய்ய முடியாதா எனக் கேள்வி எழுப்பினர்.

அத்துடன் மக்கள் நலன்சார் திட்டங்களில் அரச அதிகாரிகள் கவனயீனமாக இருப்பது அதிகாரிகள் மீது வெறுப்படையச் செய்யும் செயலாகும் என அவர்கள் தெரிவித்ததோடு குறித்த விடயம் தொடர்பில் மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(9-10)

# பனைசார் உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு



வவுனியாவில் பனையோலை சார்ந்த பொருட்கள் உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் கைத்தொழில் பிரதி அமைச்சர் புத்திக பத்திரனவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா ஓயார்சின்னக்குளம் கிராமத்தில் சுமார் 6 இலட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தொகுதியானது பனைபொருள் சார்ந்த உற்பத்தி நிலையத்திற்காக வழங்கப்பட்டுள்ளதுடன் பனையோலை உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்குமான நிலையமாக செயற்படவுள்ளது.

பனம்பொருட்கள் உற்பத்தி கிராமம் என்ற தொனிப்பொருளில் அரும்பொருட் கலையகத்தின் ஏற்பாட்டில் குறித்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் தேசிய அருங்கலை பேரவையின் பணிப்பாளர் மற்றும் வவுனியா மாவட்ட உதவி அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர், வவுனியா நகரசபை உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர். (9)

### கம்பரெலிய திட்டத்தின் கீழ்

# கால எல்லை முடிந்தும் ஆரம்பிக்கப்படாமல் உள்ள வேலைத்திட்டங்கள்




மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கம்பரெலிய வேலைத்திட்டத்தின் கீழ் பல்வேறு பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கான நிதிகள் ஒதுக்கப்பட்ட போதிலும் இதுவரை சில பகுதிகளில் எந்தவித வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிராமங்களில் உள்ளக வீதிகள் அமைத்தல்,கிரவல் வீதிகள் அமைத்தல்,கோவில்கள் தேவாலயங்களின் அபிவிருத்திக்கு என ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் சில நடைமுறை பிரச்சினைகள் காரணமாக சில அபிவிருத்தி திட்டங்கள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இருந்தபோதிலும் சில அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்ப திகதி, முடிவுத்திகதி அடங்கிய பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டு அதன் முடிவுத்திகதி 31.05.2019 என காணப்படுகின்றபோதும் இதுவரை அபிவிருத்தி திட்டங்கள் தொடங்கவே இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். (9-285)

# சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி வளர்பிறை இளைஞர் கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தினை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா கடந்த வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திருமுறிகண்டி கிராமமானது தொடர்ச்சியாக குடிநீர்ப் பிரச்சினையை எதிர்நோக்குகின்ற ஒரு கிராமமாக காணப்படுகின்றது.

இந்த வகையிலேயே பலரிடமும் இந்த கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதும் அதற்கான சரியான தீர்வு எட்டப்படாத நிலையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உடைய youth with talent திட்டத்தினூடாக குறித்த கிராமத்தின் வளர்பிறை இளைஞர் கழகத்தினர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வழங்கப்பட்ட 3 இலட்சம் ரூபா நிதியை கொண்டு ஒரு கட்டடத்தை அமைத்து ஒரு குடி நீர் திட்டத்தை வழங்குவதற்காக முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக கம்பரெலிய திட்டத்தினூடாக குறித்த குடிநீர் திட்டத்தை வழங்குவதற்காக ஒரு மில்லியன் ரூபாய்களை வழங்கியிருந்தார். மொத்தமாக 13 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டிருக்கின்ற சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இயந்திர தொகுதியுடன் கூடிய கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது. (9-281)




# குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு



கிளிநொச்சி பூநகரி வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் மாணவர்களுடைய குடிநீர் பிரச்சினைக்கான தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி பொருளாதார அமைப்பிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக நீண்ட காலம் பயன்படுத்தப்படாமல் இருந்த நீர் சுத்திகரிப்புத் தொகுதி புனரமைக்கப்பட்டு குடி தண்ணீர் பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

புலம்பெயர் தேசத்தில் வசிப்பவர் ஒருவரின் நிதியுதவியில் குறித்த திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)

# வேலங்குளம் கிராமத்துக்குள் நுழைந்த காட்டு யானைகள்

வவுனியா வேலங்குளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும் அதிகாரிகள் அசமந்தமாக செயற்படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

நேற்று முன்தினம் மாலை குறித்த கிராமத்தில் விவசாய காணி ஒன்றுக்குள் புகுந்த யானை 6 தென்னைகளையும் சுமார் 25 இற்கும் மேற்பட்ட வாழை மரங்களையும் முற்றாக சேதமாகியுள்ளது. ஏனைய மாமரங்கள், பூசணி என்பவற்றை மிதித்து நாசமாக்கியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்தில் யானையின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும் கிராம மக்கள் அச்சத்துடனே வாழ்ந்து வருவதாகவும், கிராமத்திற்குள் யானை உள் நுழையாதவாறு வேலி அமைத்து தருமாறு கிராம மக்கள் உரிய அதிகாரிகளை கேட்டும் இதற்குரிய நடவடிக்கைகள் இன்று வரையும் மேற்கொள்ளவில்லையெனவும் மக்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர். (9)

# "நாட்டுக்காக ஒன்றிணைவோம்" செயற்றிட்டம் முல்லைத்தீவில் இன்று ஆரம்பம்

## ஜனாதிபதி தலைமையில் இறுதி நாள் நிகழ்வு

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில், நாட்டுக்காக ஒன்றிணைவோம் என்ற செயற்றிட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வழிகாட்டலில் அவரின் தலைமையில் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக, முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டுக்காக ஒன்றிணை வோம் என்ற செயற்றிட்டம் நாளை தொடக்கம் 8ஆம் திகதி வரையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதில் ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்ற 10 வேலைத்திட்டங்களும் ஏனைய அமைச்சுகள் வட மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களும் என கிராம மக்களை சென்றடையக் கூடியதான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறிப்பாக ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படுகின்ற கிராம சக்தி மற்றும் நிலை பேறான அபிவிருத்தி செயற்றிட்டம், போதை ஒழிப்பு செயற்றிட்டம், உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் இந்த காலப் பகுதியில் நடைபெறவுள்ளன.

அத்துடன் மாவட்டத்தில் பல்வேறு விழிப்புணர்வுகள் மற்றும் பல்வேறு வேலைத்திட்டங்கள் ஏனைய அமைச்சுக்கள் ஊடாக முன்னெடுக்கப்பட இருக்கின்றன.

மேலும் புதிய வேலைத் திட்டங்களை ஆரம்பித்தல், மக்களிடம் கையளித்தல், காணி தொடர்பான நடமாடும் சேவை என்பன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த செயற்றிட்டம் ஊடாக மாவட்டத்தில் உள்ள பல கிராமங்களுக்கு, இலங்கையில் செயற்படுத்தப்படுகின்ற பல்வேறு திட்டங்களை முன்கொண்டு செல்வதற்கும் குறிப்பாக ஜனாதிபதி செயலகத்தால் முன்னெடுக்கப்படுகின்ற பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்பதுடன் மாவட்டத்தில் வெவ்வேறு சிரமதான நிகழ்ச்சிகள், சுற்றாடலை மேம்படுத்துகின்ற நிகழ்ச்சிகள், என்பவற்றை முன்னெடுக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (9-315)

# நிலக்கடலை செய்கையில் கூடிய ஆர்வம் காட்டியுள்ள கிளிநொச்சி விவசாயிகள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை அதிகளவான நிலக்கடலை செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக காணப்படுகின்ற போதும் கடந்த காலங்களில் அதிகளவான விவசாயிகள் நெற்செய்கையிலேயே ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் கடந்த காலங்களில் குறிப்பிட்ட சில விவசாயிகளே சிறுதானிய பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வருடத்தில் தற்போது கூடுதலான விவசாயிகள் சிறுதானிய பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ளதுடன், அதிகளவான விவசாயிகள் இம்முறை நிலக்கடலை செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக கனகாம்பிகைக் குளம்,பிரமந்தனாறு, கல்மடுநகர் முழங் காவில், திருவையாறு போன்ற பகுதிகளில் கூடுதலான விவசாயிகள் நிலக்கடலை செய்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-315)

# அளம்பில் புனித அந்தோனியார் ஆலய திறப்பு விழா



முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தின் புதிய கட்டட திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்த அளம்பில் புனித அந்தோனியார் ஆலயத்தில் புதிதாக கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்று யாழ் ஆயர்வணக்கத்துக்குரிய ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாரால் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு பலத்த பொலிஸ் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (9-281)

# முல்லையில் சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு



முல்லைத்தீவு - முறிப்புப் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல் வலைத்தளத் திணைக்களத்தினரால் முறியடிக்கப்பட்டுள்ளது. சட்டவிரோதமாக மரக்குற்றிகளை ஏற்றி முல்லைத்தீவிலிருந்து, யாழ்ப்பாணத்துக்கு வாகனத்தின் மூலம் கொண்டுசெல்ல முற்பட்டபோதே வனவளப் பிரிவினர் குறித்த வாகனத்தினை மடக்கிப்பிடித்துள்ளனர்.

மேலும் குறித்த மரக்கடத்தலுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன் ஏனையோர் தப்பி ஓடியுள்ளதாக முல்லைத்தீவு பகுதி வன அதிகாரி கே.அசங்க கமல் தெரிவித்துள்ளார். கடந்த 30 ஆம் திகதியன்று, நண்பகல் 12.30 மணியளவில், நாகசோலை ஒதுக்கக்காட்டில், முறிப்புத் தேக்கு வனத் தோட்டப் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல் செயற்பாடு ஒன்று இடம்பெற்றுள்ளது.

தேக்கு மரங்களை வெட்டி, 22குற்றிகளை டிப்பர் வகை வாகனத்தில் ஏற்றியதுடன் குற்றிகளின் மேல் சல்லிக்கற்களை பரப்பி யாழ்ப்பாணத்திற்கு கொண்டுசெல்ல முற்பட்டவேளை வலை அதிகாரிகளால் பிடிக்கப்பட்டது. வட்டார வன அதிகாரி என்.ஆர்.கே.களப்பதியின் ஆலோசனையின் கீழ்வன வெளிக்கள உதவியாளர்களான வி.நிஷிகேசன், எஸ்.அபிஷன், எஸ்.மிருஜன், ஆகியோர் இணைந்து இந்த மரக்கடத்தல் செயற்பாட்டை முறியடித்திருந்தார்கள். கைதுசெய்யப்பட்ட வாகனத்தின் சாரதியை, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது குறித்த சாரதியை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.(9-281)




# வனமாகும் வன்னேரிக்குளம் சுற்றுலா மையம்

## பராமரிப்பது பெரும் சவால் என கரைச்சி பிரதேச சபை குற்றச்சாட்டு



(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக் குளத்திலுள்ள சுற்றுலா மையத்தினை இயக்குவது கரைச்சி பிரதேச சபைக்கு பெரும் சவாலாக இருப்பதாக கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய இடமாக காணப்படும் வன்னேரிக்குளத்தினை அண்டிய பகுதியில் சுற்றுலா மையம் ஒன்றினை அமைக்குமாறு ஆரம்பத்தில் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

பருவ காலங்களில் வெளிநாட்டு பறவைகள் அரிய வகை உயிரினங்கள் வருகின்ற இடமாகவும் காணப்படும் இப்பிரதேசத்தில் சுற்றுலா மையம் அமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டு சுற்றுலா மையம் அமைக்கப்பட்டாலும் அது தற்போது பயன்பாடற்ற நிலையில் காணப்படுகின்றது.

அதாவது வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக்கொடை நிதியின் கீழ் சுமார் ஆறு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இச்சுற்றுலா மையமானது கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம்திகதி மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட வன்னேரிக்குளம் சுற்றுலா மையமானது தற்போது எந்தவித பயன்பாடுகளுமின்றி அதன் மின் இணைப்புக்கள் களவாடப்பட்டும் கட்டடங்களும் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

குறித்த சுற்றுலா மையம் அமைக்கப்பட்டதிலிருந்து செயற்பாடுகள் இன்றியும் பயன்பாடுகள் இன்றியும்தற்போதும் காணப்படுகின்றது.

இது தொடர்பில் கரைச்சிப்பிரதேச சபையின் தவிசாளரை தொடர்புகொண்டு கேட்டபோது கடந்த காலங்களிலிருந்து இது பயன்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது.

தற்போது இதனை பாதுகாக்கும் வகையில் பிரதேச சபையினால் காவலாளி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனை செயற்படுத்துவதற்கு பெருந்தொகை நிதிதேவையாகவுள்ளது.

அவ்வாறான நிதி சபையிடமில்லை. இதனைவிட சுற்றுலாப் பயணிகள் இப்பிரதேசத்திற்கு வருவதாயின் அதற்கான பிரதான போக்குவரத்துப்பாதையாக காணப்படும் திருமுறிகண்டி அக்கராயன் வீதி இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இவ்வீதி புனரமைக்கப்பட்டு போக்குவரத்துக்கள் அதிகரிக்கும் போதும் சுற்றுலாப்பயணிகள் அதிகளவில் வருகை தருவார்கள் என்றும் தெரிவித்த அவர் கரைச்சி பிரதேச சபையை பொறுத்தவரையில் இதனை இயக்குவது என்பது தற்போதைக்கு ஒரு சவாலான விடயமாகவே உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (9-315)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி வழங்கல்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட வெள்ளம்காரணமாக பாதிக்கப்பட்ட 8415 மாணவர்களுக்கு சீருடைகள், பாதணிகள், கற்றல் உபகரணங்கள் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டின் இறுதியில் திடீரென ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இந்நிலையில் அப்போது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 8415 மாணவர்களுக்கு பாடசாலை சீருடைகள், சப்பாத்துக்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறான உதவிகள் முதலாம் தவணை காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட முரசுமோட்டை முருகானந்த ஆரம்ப வித்தியாலயம்,முரசுமோட்டை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் சேதமடைந்த கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்வித்திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.(9-315)

# காங்கிரஸின் பாராளுமன்றக் குழுத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சோனியாகாந்தி



(டில்லி)

காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைவராக சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

டில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் எம்.பிக்கள் கூட்டத்தில், பாராளுமன்ற குழுத் தலைவராக சோனியா காந்தி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சி சார்பில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மக்களவை எம்.பி.க்களின் முதல் கூட்டம் டில்லியிலுள்ள பாராளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சியின் 52 மக்களவை எம்.பிக்களுடன், மாநிலங்களவை எம்.பிக்களும் பங்கேற்றனர். இதில், பாராளுமன்ற குழு தலைவராக சோனியா காந்தி தெரிவு செய்யப்பட்டார்.

சோனியா காந்தியின் பெயரை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பரிந்துரைத்தார். இதையடுத்து, காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவராக சோனியா காந்தி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளார். இதன் மூலம் அவர் மக்களவை, மாநிலங்களவை எம்.பி.க்களுக்கு தலைவராக இருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# காங்கிரஸின் 52 உறுப்பினர்களும் பா.ஜனதாவை வலுவாக எதிர்ப்பார்கள்




நாடாளுமன்றத்தில் , காங்கிரசின் 52 எம்.பிக்களும் வலுவாக எதிர்ப்பார்கள் என்றும் ராகுல் காந்தி உறுதிபட தெரிவித்து உள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 52 இடங்களில் வெற்றி பெற்றது. இந்த புதிய எம்.பி.க்களின் கூட்டம் நேற்று முன்தினம் நாடாளுமன்ற மைய மண்டபத்தில் நடைபெற்றது. கட்சியின் மாநிலங்களவை மற்றும் காரியக்கமிட்டி உறுப்பினர்களும் பங்கேற்ற இந்த கூட்டத்தில் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவராக சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தக் கூட்டத்தில் கட்சித் தலைவர் ராகுல் காந்தி சிறப்புரையாற்றினார். அப்போது புதிய உறுப்பினர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் வழங்கி உத்வேகம் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நீங்கள் (எம்.பிக்கள்) ஒரு மிகச்சிறந்த தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கிறீர்கள். தாங்கள் உண்மையில் யாரை எதிர்த்து வெற்றி பெற்று இருக்கிறோம் என்பதை இந்தத் தேர்தலில் வென்ற நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். சுதந்திர இந்தியாவில் முதன் முறையாக ஒரு அரசியல் கட்சிக்கு எதிராக இல்லாமல் ஒவ்வொரு நிறுவனத்துக்கு எதிராகவும் போராடி வென்றவர்கள் நீங்களாகத்தான் இருக்க முடியும்.

நாம் 52 உறுப்பினர்கள் இருக்கிறோம். இந்த 52 பேருக்கு எதிராக எந்த அமைப்புகள் நின்றாலும் கவலையில்லை. யார் நின்றாலும் பிரச்சினை இல்லை. இந்த 52 உறுப்பினர்களும் பா.ஜனதாவை ஒவ்வொரு அங்குலத்திலும் எதிர்ப்பார்கள் என உறுதியளிக்கிறேன். மாநிலங்களவை உறுப்பினர்களுக்கும் இது பொருந்தும். நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு கடந்த முறை நமக்கு 5 நிமிடங்களை சபாநாயகர் ஒதுக்கி இருந்தால், இந்த முறை வெறும் 2 நிமிடங்கள் கூட தரலாம். அந்த 2 நிமிடங்களிலும் காங்கிரசின் நம்பிக்கையை, அரசியல் சாசன பாதுகாப்பை நாம் உறுதியாக எடுத்து வைக்க வேண்டும்.

ஆங்கிலேயர் கால இந்தியாவை போன்ற சூழல்தான் தற்போது நிலவுகிறது. அப்போது எந்த ஒரு நிறுவனமும் காங்கிரஸ் கட்சிக்கு உதவவில்லை. ஆனால் அப்போது போராடி வென்றது போல தற்போதும் நாம் போராடி வெற்றி பெறுவோம். ஒரு பிரதான எதிர்க்கட்சியாக காங்கிரஸ் அச்சமின்றி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தனது கடமையை செய்யும். என மேலும் தெரிவித்தார். (7)

# மோடியின் முதல் அமைச்சரவை கூட்டம்



இந்திய புதிய பிரதமர் நரேந்திர மோடியின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. இதன்போது முதலாவது நடவடிக்கையாக விவசாயிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி முதலில் விவசாயிகளுக்கு வருடாந்தம் 6000 இந்திய ரூபாய்களை வழங்குவதற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 15 கோடி விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படுவதுடன், சுமார் 81,217 கோடி ரூபாய்கள் இதற்காக செலவிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## ட்ரம்புடனான இரண்டாவ

# 5 வடகொரிய அதிகாரிகளு

## ஜனாதிபதி கிம் ஜாங் உ



(சியோல்)

**ட்ரம்ப் உடனான 2 ஆவது சந்திப்பு தோல்வி அடைந்ததால் ஆத்திரம் அடைந்த வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்த 5 அதிகாரிகளுக்கு மரணதண்டனை அளித்தார்.**

வடகொரியாவின் தலைவரான கிம் ஜாங் உன் சர்ச்சைக்கு பெயர் போனவர்.

தனது தந்தையின் மறைவுக்கு பின் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இவர் நாட்டில் பல அதிரடி மாற்றங்களை கொண்டு வந்தார்.

ஐ.நா.வின் தீர்மானங்களை மீறி தொடர்ச்சியாக அணுவாயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகளை நடத்தி சர்வதேச நாடுகளை அதிரவைத்து வந்தார்.

இது ஒருபுறம் இருக்க தனது அரசில் ஊழல் செய்யும் அதிகாரிகள் மற்றும் தனக்கு விசுவாசமாக இல்லாதவர்களுக்கு, கொடூரமான முறையில் மரண தண்டனை நிறைவேற்றியும் உள்ளார்.

இந் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உடனான 2-வது சந்திப்பு தோல்வியடைந்ததால், இந்த பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்த அமெரிக்காவுக்கான சிறப்பு தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறையின் சிரேஷ்ட அதிகாரிகள் 4 பேரை சுட்டுக் கொன்று மரண தண்டனை நிறைவேற்றியதாக தென்கொரியா ஊடகம்

# அமெரிக்காவில் து

# 12 பேர் உயிரிழப்பு;

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் விர்ஜினியா மாகாணத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 12பேர் பரிதாபமாக பலியாகினர்.

அமெரிக்காவில் குடிமக்கள் துப்பாக்கி வைத்திருக்க அந்நாட்டு அரசியல் சாசனம் அனுமதி அளித்துள்ளது. இதனால் அங்கு பெரும்பாலானோர் துப்பாக்கிகளை வைத்துள்ளனர். இது அமெரிக்க அரசுக்கு தற்போது பெரும் தலைவலியாக மாறியுள்ளது. ஏனெனில் பல்வேறு காரணங்களுக்காக சக குடிமக்களை சிலர் கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளும் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

அந்த வரிசையில், விர்ஜி



னியா மாகாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இத் துப்பாக்கிச்சூடு சம்பவம்

# ஐ.எஸ்ஸால் பணயக் கைதி சுட

பிலிப்பைன்ஸில் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் ஆதரவு அமைப்பினால் கடத்திச் செல்லப்பட்ட நெதர்லாந்து பிரஜை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐ.எஸ் ஆதரவு அமைப்பான அபு சய்யஃப் பயங்கரவாதிகளிடம் பணயக் கைதியாக இருந்த நெதர்லாந்தைச் சேர்ந்த பறவை ஆர்வலர் எவோல்ட் ஹார்ன் என்பவரே நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அவரை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது, இராணுவத்தினருக்கும், பயங்

# ...வது சந்திப்பு தோல்வி!

# ...களுக்கு மரணதண்டனை

## ... உன் அதிரடி



... தகவல் வெளியிட்டுள்ளது. எலியும், பூனையுமாக இருந்து வந்த ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங் உன், கடந்த ஆண்டு ஜூன் மாதம் சிங்கப்பூரில் முதன் முறையாக சந்தித்து பேசினர்.

இந்த சந்திப்பு மிகவும் இணக்கமாக நடைபெற்றதால் இருநாட்டு உறவில் நீடித்த விரிசல் விலகியது. இதையடுத்து வடகொரியா ஏவுகணை சோதனைகளை நிறுத்திவிட்டு அமைதிப் பாதைக்கு திரும்பியது.

இந்த நிலையில் கொரிய தீபகற்பத்தை அணுவாயுதமற்ற பிரதேசமாக மாற்றுவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்க ட்ரம்ப் மற்றும் கிம் ஜாங் உன் ஆகிய இருவரும் கடந்த பெப்ரவரி மாத இறுதியில் வியட்நாமில் 2-வது முறையாக சந்தித்து பேசினர்.

ஆனால் இந்த சந்திப்பு முதல் சந்திப்பை போல இணக்கமாக நடைபெறவில்லை.

கிம் ஜாங் உன்னின் கோரிக்கையை ஏற்க மறுத்து, ட்ரம்ப் பேச்சுவார்த்தையில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். இது கிம் ஜாங் உன்னுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. இதையடுத்து, இந்த சந்திப்புக்கு ஏற்பாடுகளை செய்த சிறப்பு தூதர் கிம் ஹியோக் சோல் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் 4 பேர் மீது நாட்டின் தலைவருக்கு துரோகம் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டது. விசாரணைக்கு பிறகு கடந்த மார்ச் மாதம் அவர்கள் 5 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து அங்குள்ள ஒரு விமான நிலையத்தில் வைத்து, 5 பேரும் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தென்கொரியா ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# ஈராக் மற்றும் சிரியாவில் தவறுதலாக 1300 பொதுமக்கள் சுட்டுக்கொலை

(பக்தாத்)

ஈராக் மற்றும் சிரியாவில் நிலைகொண்டுள்ள தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களில், எதிர்பாராத விதமாக 1,300 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க தலைமையிலான கூட்டணிப் படைகள் தெரிவித்துள்ளன.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் தற்போது வரையிலான காலப் பகுதியிலேயே, இந்த உயிரிழப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன. எனினும் இதனை மறுத்துள்ள மனித உரிமைகள் மற்றும் கண்காணிப்பு அமைப்புகள், இதன் உண்மையான எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்றும், உண்மையான ஆதாரங்களை ஆராய்ந்து வருவதாகவும் கூறியுள்ளது.

இதற்கிடையில், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 8,000 முதல் 13,000 வரை இருக்கும் என்று 'ஏயார் வார்ஸ்' எனும் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுதவிர, சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக தாக்குதல்களைத் தொடங்கியது முதல் இதுவரை 34,502 விமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப் படைகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இரண்டாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிடத் தயார்

## ட்ரம்ப் அறிவிப்பு



(வோஷிங்டன்)

இரண்டாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிடுவது குறித்த உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிடவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

புளோரிடா மாகாணத்தின் ஓர்லாண்டோ பகுதியில் வைத்து எதிர்வரும் 18ஆம் திகதி இதுகுறித்த அறிவித்தலை வெளியிடவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ள பதிவில், 'எதிர்வரும் ஜூன் 18ஆம் திகதி புளோரிடா மாகாணத்தின் ஓர்லாண்டோ நகரில் அம்வே செண்டரில் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை அறிவிக்க உள்ளேன். இந்த வரலாற்றுப் பேரணியில் அனைவரும் இணைவீர்' என குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் குடியரசுக் கட்சி சார்பாக தான் மீண்டும் போட்டியிட விரும்புவதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ... துப்பாக்கிச் சூடு!

## ...; 6 பேர் படுகாயம்



... அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் தென்பகுதியில் அமைந்துள்ளது விர்ஜினியா மாகாணம். இங்குள்ள விர்ஜினியா பீச் பிரபலமானது.

அங்குள்ள ஒரு கட்டட வளாகத்திற்குள் திடீரென துப்பாக்கியோடு நுழைந்த மர்ம நபர், அங்கிருந்தவர்களை பாரபட்சம் காட்டாமல் கண்மூடித்தனமாக சுட்டார்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் 12 பேர் பலியாகினர். 6 பேர் படுகாயம் அடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர். தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் தாக்குதல் நடத்திய நபரை சுட்டுக்கொன்றனர். துப்பாக்கிச்சூடு நடத்தியவர் என்ன காரணத்துக்காக நடத்தினார் என்ற தகவல் வெளியாகவில்லை. (7)

# அமெரிக்காவில் ரூ.56 கோடி மோசடி போலி சவுதி இளவரசருக்கு 18 ஆண்டு சிறை

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ரூ.56 கோடி மோசடி செய்த போலி சவுதி இளவரசருக்கு 18 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

அமெரிக்காவில் சவுதி இளவரசர் காலித் பில் அல் சவுத் என நடித்து, 30 வருடங்கள் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து மோசடிகளை அரங்கேற்றிய நபர் வசமாக சிக்கினார். அவரது பெயர்ஆண்டனிஜிக்நாக்(வயது 48).

இவர் அங்குள்ள மியாமி மாகாணம், பிஷர் தீவில் தனக்குத்தானே ஒரு ராஜாங்கம் நடத்தி வந்திருக்கிறார். தன்னைச் சுற்றிலும் மெய்க்காப்பாளர்கள் அணிவகுக்க வலம் வந்துள்ளார்.

பெராரி காரில் போலி தூதரக ரீதியிலான லைசென்ஸ் பிளேட் பொருத்தி, எங்கு சென்றாலும் சவுதி இளவரசர் என்ற தகுதிக்கான உரிமைகளை கேட்டுப் பெற்று வந்துள்ளார். அவரது ஆடம்பர குடியிருப்பில் 'சுல்தான்' என்று பெயர்ப்பலகை மாட்டியதை பலரும் நம்பி, அவர் முதலீடுகள் செய்வார் என நம்பி அவரது வங்கிக்கணக்கில் 8 மில்லியன் டொலர் (சுமார் ரூ.56 கோடி) செலுத்தி ஏமாந்துள்ளனர்.

பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பதுபோல அவர் அகப்பட்டு, அவர் மீது அமெரிக்க நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதால் 18 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (7)

# ...சுட்டுக் கொலை!

... கரவாதிகளுக்கும் இடையே துப்பாக்கி மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, எவோல்ட் ஹார்ன் அங்கிருந்து தப்பியோட முயன்றுள்ளார். இதனைக் கண்ட பயங்கரவாதிகள், அவரை சுட்டுக் கொன்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)



# தொழிற்சாலையில் வெடிவிபத்து 82 பேர் படுகாயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவிலுள்ள தொழிற்சாலை ஒன்றில் நேற்றைய தினம் ஏற்பட்ட வெடி விபத்தில் 82 பேர் காயமடைந்துள்ளனர்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிலுள்ள தொழிற்சாலை ஒன்றிலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

41 பொதுமக்கள் உள்ளிட்ட 82 பேரே இதன்போது படுகாயமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், தொழிற்சாலை விபத்து காரணமாக 180 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம் அடைந்துள்ளன.

தொழிற்சாலை விபத்து குறித்து ரஷ்ய புலனாய்வு அதிகாரிகள் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



கடந்த ஒரு ஆண்டுகாலமாக ரஷ்யாவிலுள்ள டிஎன்டி தொழிற்சாலையில் விபத்து ஏற்படுவது இது மூன்றாவது முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## மூவரின் பதவி நீக்கத்தை வலியுறுத்தும்

# தேரரின் உண்ணாவிரதத்தை கண்டுகொள்ளாத மைத்திரி





(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீன், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரை பதவி நீக்கம் செய்யக் கோரி, அத்துரலிய ரத்ன தேரர் தலதா மாளிகைக்கு முன்பாக நடத்தி வரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் தலையீடு செய்யும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை என்று ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"போராட்டத்தை ஆரம்பிக்க முன்னதாக, அத்துரலிய ரத்ன தேரர் ஜனாதிபதியைச் சந்தித்து, முதலில் கலந்துரையாடியிருக்க வேண்டும்.

அவர் அவ்வாறு செய்யாத நிலையில், இந்த விடயத்தில் இப்போதைக்குத் தலையிடும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை" என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை, "ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுவதால், தாம் தலையீடு செய்ய விரும்பவில்லை என்றும், எனினும் நாளை அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை முன்னிலைப்படுத்தவுள்ளதாக புத்தசாசன அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவித்தார்.(இ-7)

# ரவியை விலக்க முடியும் என்றால் றிசாத்தை விலக்க ஏன் தயக்கம்?

## மகிந்த அணி திலும் கேள்வி





(கொழும்பு)

ரவி கருணாநாயக்கவை விசாரணைக்காக அமைச்சுப் பதவியிலிருந்து நீக்க முடியுமாக இருந்தால், ஏன் அமைச்சர் றிசாத் பதியுதீனை பதவி நீக்க இந்த அரசாங்கத்துக்கு முடியாமல் உள்ளது என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் திலும் அமுனுகம கேள்வி எழுப்பினார்.

அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்த உண்ணாவிரதப் போராட்டத்தை காண்பதற்கு நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகை வளாகத்துக்கு சென்றிருந்த போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# நான் பதவி விலக மாட்டேன் அடம் பிடிக்கும் அசாத் சாலி

(கொழும்பு)

எத்தகைய போராட்டங்கள், அழுத்தங்களுக்கும் அடி பணிந்து, பதவி விலகப் போவதில்லை என்று மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

அமைச்சர் றிசாத் பதியுதீன், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோர் விலக வேண்டும் என்றும், அவர்களை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தலதா மாளிகைக்கு முன்பாக நேற்று மூன்றாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்.

எனினும், தாம் பதவி விலகப் போவதில்லை என்று மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, உறுதியாகத் தெரிவித்தார்.

"யாரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தலாம். அது அவர்களின் தனிப்பட்ட உரிமை. எந்தவகையிலும் குற்றவாளியாக நிரூபிக்கப்படாத ஒருவரை பதவி விலகுமாறு எவ்வாறு கூற முடியும்?

அவர்களின் கோரிக்கையை



ஏற்று பதவி விலக மாட்டேன். அவ்வாறு பதவி விலகும் எண்ணம் கிடையாது" என்றும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.(இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் மிகவும் கெட்டுப் போய் விட்டது சேர்! அந்தக் காலத்தில் இது போன்று அக்கிரமம் நடக்குமா? எனச் சொல்லுவோர் சிலர்.

இந்த உலகம் மிகவும் முன்னேறியுள்ளது சேர்! அடுத்த கிரகத்திற்கே போய் வீடு கட்டலாமா? என யோசிக்கும் அளவிற்கு வந்துவிட்டோமே என சொல்லுவோர் சிலர்.

அது சரி நிஜமாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா? கொஞ்சம் நிதானமாக யோசித்துப் பாருங்கள் உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா?

அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்றால் அதற்காக கவலைப்பட வேண்டாம். வாருங்கள் இராம கிருஷ்ணரிடம் போகலாம்.

அவர் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லியிருக்கிறார் ஒரு சின்னக் கதை மூலமாக.

உலகம் நல்லதா? கெட்டதா? என ஒருத்தர் ஒரு பெரியவரைப் பார்த்து கேட்டிருக்கிறார். அதற்கு அந்த பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து,

அதற்கு நான் பதில் சொல்கின்றேன். அதற்கு முன்னால் நான் ஒரு கேள்வி கேட்கின்றேன். அதற்கு பதில் சொல் என்றார். சரி கேளுங்கள் என்றார் அவர்.

பூனைக்குப் பல் இருக்கே அது நல்லதா? கெட்டதா? எனக் கேட்டார் இவர். இதைக் கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்து விட்டார்.

என்ன இது நான் உலகம் நல்லதா கெட்டதா? என்று கேட்டால் அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா ,கெட்டதா என என்னிடமே திருப்பிக் கேட்கிறார் என யோசித்தார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை அதற்குப் பிறகு அந்தப் பெரியவர் விளக்கம் கொடுத்தார்.

ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா, கெட்டதா எனக் கேட்டால் அதற்கு என்ன பதில் வரும் யாரிடம் போய் இந்த கேள்வியைக் கேட்கிறோமோ அதற்குத் தகுந்த மாதிரி தான் பதில் வரும்.

பூனையின் பல் நல்லதா, கெட்டதா என அந்த பூனையினுடைய குட்டியிடம் கேட்டால் அது என்ன பதில் சொல்லும்.

எங்கள் அம்மாவிடம் இருக்கிறது வெறும் பல் இல்லை அது கருணையின் வடிவம். அந்தப் பல்லாலே தான் எங்க அம்மா என்னைக் கவ்வித் தூக்குவார். பாதுகாப்பான இடங்களுக்கு என்னைத் தூக்கி கொண்டு போவது எங்க அம்மாவிடம் இருக்கிற பல் தான். அது இல்லை என்றால் நான் இல்லை என்றுதான் குட்டிப் பூனை பதில் சொல்லும்.

ஆனால் அதே கேள்வியை ஒரு எலியிடம் போய் கேளுங்கள் பூனைக்கு பல் இருக்கிறது நல்லதா, கெட்டதா என்றால் அது என்ன சொல்லும்?

பல்லா அது? எமன்! கடவுள் பூனையைப் படைத்ததோடு விட்டிருக்கக் கூடாதா? அதற்குப் பல்லை எதற்காக படைத்தார். அந்தப் பல்லுடைய கொடுமை கடிபடுகின்ற எனக்கு தான் தெரியும் எனப் புலம்பும்.

பூனையின் பல்லைக் குட்டிப் பூனை பார்ப்பது ஒரு மாதிரி, எலி பார்ப்பது ஒரு மாதிரி.

அது போல தான் இந்த உலகம் நல்லதா, கெட்டதா எனக் கேட்டால் இந்த உலகத்தின் தன்மையைப் பார்க்கிறவர்களைப் பொறுத்து தான் அது!

இந்த உலகம் உள்ளவரை அதை நல்லது எனச் சொல்லுபவர்களும் இருப்பார்கள், கெட்டது எனச் சொல்லுபவர்களும் இருப்பார்கள்.

எப்பவும் சந்தோஷமாய் இருக்கிற இரண்டு பேர் சந்தித்துக் கொண்டார்கள். உங்கள் சந்தோஷத்திற்கு என்ன காரணம் என்று ஒருத்தர் ஒருத்தரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டார்கள்.

என் அத்தை மகள் என்னைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வது என்று உறுதியாக சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோஷமாக இருக்கின்றேன் என்றார் ஒருத்தர்.

என் அத்தை மகள் என்னை கல்யாணம் பண்ண மாட்டேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அதுதான் நான் சந்தோஷமாக இருக்கின்றேன் என்றார் இன்னொருத்தர்.

இரண்டும் இரண்டு விதமான பார்வை.

# மூவரும் பதவி விலகவேண்டும், இல்லையேல் ரத்ன தேரர் உண்ணாவிரதத்தை நிறுத்தும் போது நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பேன்

## சுமணரட்ன தேரர் எச்சரிக்கை

(ஏறாவூர்)

**அடிப்படைவாதத்திற்கு உடந்தையாக இருக்கின்ற ஆளுநர்களான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, அசாத் சாலி, அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும். இல்லாவிடின் அத்துரலிய ரத்ன தேரர் உண்ணாவிரதத்தை நிறுத்தும்போது நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பேன் என மட்டு. மங்களராம விகாராதிபதி ஸ்ரீ அம்பிட்டிய சுமணரட்ன தேரர் எச்சரிக்கை விடுத்தார்.**



மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச. வியாழேந்திரன் நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுத்திருந்த போராட்டத்தில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சுமணரட்ன தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்த உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரொருவர் உண்ணாவிரதத்தை முன்னெடுத்தமை பெரும் மகிழ்ச்சியை அளிப்பதோடு இதுதான் ஒற்றுமைக்கான ஓர் அடையாளமாகும்.

மேலும் ஒரு நாட்டுக்குப் பிரச்சினை வரும்போது அனைத்து இனங்களும் ஒன்றாக இணைந்து செயற்பட வேண்டும்.

இந்தச் செய்தியைத்தான் சமூகத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்த உண்ணாவிரதம் அரசியல் ரீதியானவையோ இன மத ரீதியானவையோ அல்ல. முஸ்லிம் அடிப்படை வாதிகளுக்கு எதிரானதாகும்.

எனவே அடிப்படை வாதத்திற்கு உடந்தையாக இருக்கின்ற ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, அசாத் சாலி, றிசாத் பதியுதீன் ஆகியோருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு பதவியிலிருந்தும் நீக்கப்பட வேண்டும்.

இத்தகைய முஸ்லிம் அரசியல்வாதிகளின் செயற்பாடுகளாலேயே அனைத்து இனங்களும் வாழ்வதற்குக்கூட நாடொன்று இல்லாமல் போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஜனாதிபதி, பிரதமர், ஏனைய மக்கள் பிரதிநிதிகள் என அனைவரும் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் இல்லாவிடின் அத்துரலிய ரத்ன தேரர் உண்ணாவிரதத்தை நிறுத்தும்போது நான் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க வேண்டியேற்படும்" என சுமணரட்ன தேரர் எச்சரிக்கை விடுத்தார். (இ-7)

---

## கர்ப்பப்பை போர் நடத்தி

# மருத்துவர் ஷாபி இனப்படுகொலை!

## வீரவன்ச குற்றச்சாட்டு

(குருநாகல்)

குருநாகல் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய மருத்துவர் ஷாபி சஹாப்தீன் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்டதுடன் அந்தக் கட்சியின் தலைமையகத்தை நிர்வகிக்க பணத்தை வழங்கும் நபர் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம்சாட்டினார்.

இதனால், ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் சுகாதார அமைச்சரான ராஜித சேனாரட்னவின் விசாரணைக் குழு மூலம் மருத்துவர் நிரபராதியாக மாற்றப்படுவார் எனவும் வீரவன்ச தெரிவித்தார்.



குருநாகல் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற சந்திப்பொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கடமையாற்றுவோரை கொண்ட ஜனாதிபதியால் நியமிக்கப்படும் சுயாதீன குழுவின் ஊடாகவே; ஷாபியின் கர்ப்பப்பை போரில் சிக்கிய தாய்மாருக்கு நீதி நியாயம் கிடைக்கும்.

மருத்துவர் ஷாபியிடம் சிசேரியன் செய்து கொண்ட சுமார் 300 தாய்மார் முறைப்பாடுகளை செய்தனர். சிசேரியன் செய்து கொண்ட பின்னர், தமக்குப் பிள்ளை பிறக்கவில்லை என்ற ஒரே காரணத்தையே சகல பெண்களும் கூறியுள்ளனர். இது நாட்டில் பிறக்கவிருந்த பிள்ளைகளைக் கொன்ற சம்பவம் இல்லையா?.

மருத்துவர் ஷாபி கர்ப்பப்பை போரை நடத்தினார். சிங்களத் தாய்மாரை மாத்திரம் இலக்கு வைத்து செய்துள்ள இந்தப் போரை இனப்படுகொலையாக கூற முடியும் எனவும் வீரவன்ச தெரிவித்தார். (இ-7)

---

## பதுளையில் பாரிய மண் சரிவு 3233 குடும்பங்களுக்கு எச்சரிக்கை

பதுளை மாவட்டத்தில் பாரிய மண் சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் வசிக்கும் 29 ஆயிரம் குடும்பங்களுக்கு இந்த மண் சரிவு அபாயம் உள்ளதாக பதுளை மாவட்ட செயலாளர் தமயந்தி பரணகம தெரிவித்துள்ளார். இவர்களில் 3233 குடும்பங்களுக்கு மிகவும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

---

## வியாழேந்திரன் எம்.பியின் உண்ணாவிரதம் நிறைவு

### தமிழ் உணர்வாளர்கள் ஆரம்பிப்பு



(ஏறாவூர்)

அமைச்சர் றிசாத் பதியுதீன், மாகாண ஆளுநர்களான ஹிஸ்புல்லா மற்றும் அசாத் சாலி ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரனால் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை இரவு நிறைவு செய்தார்.

அவர், நிறைவு செய்ததைத் தொடர்ந்து தமிழ் உணர்வாளர்கள் அமைப்பால் குறித்த உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனிடையே, உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டு கருத்துத்தெரிவித்த வியாழேந்திரன், "கிழக்கு மாகாண ஆளுநர், மேல்மாகாண ஆளுநர், அமைச்சர் றிசாத் ஆகியோரை பதவி நீக்கும் வரையில் சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்" எனத் தெரிவித்தார். (இ-7)

---

## அத்துரலிய ரத்ன தேரரின் உடல்நிலை சீராக உள்ளது



கண்டி தலதா மாளிகைக்கு முன்பாக, நேற்று மூன்றாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அத்துரலிய ரத்ன தேரரின், உடல்நிலை நன்றாகவே இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரையில் ஊழல் மோசடிகள்!

## ஜனாதிபதி மைத்திரி விரக்தி





(பொலநறுவை)

நாம் ஒரு தேசம் என்ற வகையில் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டபோதும் பொருளாதார சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதற்கு அரசாங்கத்தின் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை இடம்பெறும் ஊழல் மோசடிகளே காரணம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பொலநறுவை மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு சமுர்த்தி நன்மைகளை பெற்றுக்கொடுப்பதற்காக நேற்று முன்தினம் ரஜரட்ட நவோதய விளையாட்டரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் குறைந்த வருமானம் பெறும் மக்களைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றி, வறுமையை ஒழிப்பதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், சுமார் 14 இலட்சமாக இருக்கும் சமுர்த்திப் பயனாளிகளை 20 இலட்சமாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் இவ்வருடம் தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எப்போதும் பயனாளிகளாகவே இருக்காது சுயமாக எழுந்திருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு கைகொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி இருப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் வறுமை அதிகரித்திருப்பதற்கான பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, சில அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் திருட்டுக்களில் ஈடுபடுவதும், அரசாங்கத்திற்கு இலாபமீட்டித்தரும் அரச நிறுவனங்களில் இடம்பெறும் பாரிய ஊழல், மோசடிகளின் காரணமாக அந்நிறுவனங்கள் பாரிய நட்டத்தில் இயங்கி வருவதன் காரணமாக ஏற்பட்டுள்ள நாட்டின் கடன் சுமையுமே நாட்டின் வறுமை நிலை அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

நாம் ஒரு தேசம் என்ற வகையில் சுதந்திரத்தை பெற்றுக் கொண்டபோதும் பொருளாதார சுதந்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதற்கு அரசாங்கத்தின் உயர் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை இடம்பெறும் ஊழல் மோசடிகளே காரணமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மக்களை பிழையாக வழிநடத்தி சில ஊடகங்கள் மேற்கொண்டுவரும் போலிப் பிரச்சாரங்கள் பற்றி கவலை அடைவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டில் குழப்பமான நிலையொன்று தோற்றுவிக்கப்பட்டிருப்பது இந்த குறுகிய நோக்கம் கொண்ட சந்தர்ப்பவாதிகளின் போலிப் பிரசாரங்களின் காரணத்தினாலேயாகும் என்றும் நாட்டுக்காக ஊடகங்களுக்கும் முக்கிய பொறுப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

இன்று தான் நாட்டுக்காக உலகை வெற்றி கொண்டுள்ளதுடன், அனைத்து உலகத் தலைவர்களினதும் ஆதரவு தமக்குக் கிடைத்திருப்பதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, இரண்டாவது தடவையாகவும் பிரதமராக பதவிப் பிரமாணம் செய்துள்ள நரேந்திர மோடி ஒரு வார காலத்திற்குள் தமது கோரிக்கையின் பேரில் இலங்கைக்கு வருகை தருவது பயங்கரவாதத் தாக்குதலுக்கு மத்தியில் மிகவும் குறுகிய காலத்தில் அமைதியான சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்திருப்பது பற்றி தனது மகிழ்ச்சியை வெளியிடும் வகையிலாகும் என்றும் தெரிவித்தார்.

மாவட்டத்திலுள்ள 8,900 சமுர்த்தி பயனாளிகளுக்கு நன்மைகளை வழங்கும் நிகழ்வையும் ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

மர நடுகை திட்டத்தின் கீழ் மாவட்ட மக்களுக்கு மாங்கன்றுகளும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன.

அமைச்சர் தயா கமகே, இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க, தமன்கடுவ பிரதேச சபையின் தவிசாளர் பேமசிறி முணசிங்க, நகரபிதா சானக சிதத் ரணசிங்க, மாவட்ட செயலாளர் பண்டுக அபேவர்தன, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# புதிய ஜனாதிபதி வேட்பாளரிடம் கோரிக்கைகளை முன்வைப்போம்

## அடுத்த கட்டத்திற்கு திகாம்பரம் தயார்



(தலவாக்கலை)

நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் புதிய ஜனாதிபதி வேட்பாளரிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து அவருக்கு ஆதரவு வழங்குவோமென அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலை, லோகி பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

"எமது மக்களை காலம் காலமாக ஏமாற்றி வந்தவர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் ஏமாற்றுவதற்கு முனைவார்கள்.

ஆகையால் மக்கள் இவ்விடயங்களில் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் மாறாக ஏமாறி வாக்களிப்பீர்களாயின் தனி வீட்டுத் திட்டமொன்று இல்லாமல் போய் விடும்.

இதேவேளை எமது நோக்கம் மலையகத்திலுள்ள லயன் வீடுகளை இல்லாதொழித்து கிராமங்களை உருவாக்குவதேயாகும். மேலும் 50 தனிவீட்டுத் திட்டம் மிக விரைவில் மலையகத்திற்கு கொண்டுவரப்படவுள்ளது.

ஆகையால் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால் மாத்திரமே மலையகத்தில் சிறந்த அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும்" என திகாம்பரம் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இழப்புக்களை எதிர்கொண்டவர்களின் வேதனையை என்னால் உணரமுடியும்

## அமைச்சர் சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)

குண்டுத்தாக்குதலில் தந்தையை இழந்து நானும் வேதனையடைந்துள்ளேன். ஆகையால் அண்மையில் இடம் பெற்ற தாக்குலில் இழப்புக்களை எதிர் கொண்டவர்களின் வேதனையினை என்னால் உணரமுடியுமென வீடமைப்பு, நிர்மாணத்துறை, கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட உங்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை நிச்சயம் செய்து தருவேன்.

இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட துன்பத்தை வார்த்தைகளால் கூறிவிட முடியாது. நாங்கள் எவ்வளவு பணம் கொடுத்தாலும் நன்மைகளைச் செய்தாலும் நீங்கள் இழந்த உறவுகளை திரும்பவும் கொண்டுவந்து உங்களிடம் தரமுடியாது.

உங்களுடைய சூழ்நிலையை எனக்கு நன்றாகப் புரிந்துகொள்ள முடிகின்றது. ஏனெனில் நானும் எனது தந்தையை இவ்விதமான ஒரு சூழ்நிலையில்தான் இழந்தேன். ஆகையாலேயே உங்களுடைய வேதனையையும் என்னால் புரிந்துகொள்ள முடிகின்றது.

தீவிரவாதிகளின் தாக்குதலால் நீங்கள் இழந்த உங்களுடைய குழந்தைகளுக்கு, பெற்றோர்களுக்கு பதிலாக எங்களால் முடிந்த வரையறையற்ற உதவிகளை செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம்.

உங்களுக்கு உதவி செய்வதில் இருக்கக்கூடிய கட்டுப்பாடுகள், தடைகள் அனைத்தையும் தகர்த்து எமது அமைச்சின் ஊடாக உங்களுக்கு உதவிகளை செய்வோம். உங்களுடைய வாழ்க்கையை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு நாங்கள் முயற்சிக்கின்றோம்.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தன்னைத்தானே வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் வாழ்வாதாரங்களை உயர்த்தும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

இதன்படி முதற்கட்டமாக சமூகத்தை வலுவூட்டும் நிகழ்வு நிறைவேற்றப்படும். இரண்டாம் கட்டமாக பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல் தொடர்பான செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்படும். மூன்றாம் கட்டமாக பிள்ளைகளுக்கும் இளைஞர் யுவதிகளுக்குமான கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படும். நான்காவதாக கலாசார சமய ரீதியான மேம்பாட்டிற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

ஐந்தாவதாக ஒருவருக்கு காணப்படுகின்ற விஷேட திறமைகள் வளங்களை மேம்படுத்துவதான சமூக கலாசார ரீதியில் அவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டுவருவதற்கான செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும். ஆறாவதாக இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட, உறவுகளை இழந்த, காயமுற்றவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தல் அல்லது வீடுகளை திருத்திக் கொடுத்தல் என்ற செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

குறித்த செயற்றிட்டத்திற்காக 95மில்லியன் ரூபாவை நான் ஒதுக்கியிருக்கின்றேன்" என சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஜூலை மாதம் முதல் முன்னெடுப்பு

(கொழும்பு)

அரச துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம், 2019 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்ட முன்மொழிவுக்கு அமைவாக மறுசீரமைக்கப்படவுள்ளதாக அரச பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஏ.ரத்னசிறி தெரிவித்தார்.

இந்த மறுசீரமைப்பு ஜூலை மாதம் முதலாம் ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான சுற்றறிக்கைகள் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களங்களின் தலைமை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் ஆகியோருக்கு அரச பொது நிர்வாக அமைச்சிலிருந்து நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்



இறப்பர் தோட்டம்

## சுதந்திரத்தின் பின் இலங்கை அரசின் அரசியல் நடவடிக்கைகளும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும் (கி.பி.1948-கி.பி.1983)

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் தோற்றம் பெற்ற யாழ்ப்பாணச் சங்கம் (1905), தமிழர் மகாஜன சபை (1921), யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் (1924) ஆகிய தமிழ் அரசியல் அமைப்புக்கள், தாமும் இலங்கை ஆட்சியில் பங்கெடுத்துக் கொள்வதற்காக அரசியல் சீர்திருத்தங்கள் கோரி பிரித்தானிய அதிகார வர்க்கத்துடன் கிளர்ச்சிகளில் இறங்கின.

இக்காலகட்டங்களிலிருந்து 1940 கள் வரையில் தமிழ் அரசியல் தலைவர்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தொடர்ச்சியாக அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சிகளில் இறங்கியமை பற்றியும் அந் நிகழ்வுகள் எவ்வாறு தமிழ்த் தேசிய வாதத்தின் எழுச்சிக்கு வழிகோலின என்பது பற்றியும் ஏற்கனவே முன்னைய அத்தியாயங்களில் ஆராயப்பட்டது.

மேலும் 1944 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் அரசியல் தலைவர்கள் பெரும்பான்மையினருக்கு வழங்கப்பட்டது போன்று சிறுபான்மையினருக்கும் சிறுபான்மையினரில் பெரும்பான்மை வகிக்கும் இலங்கையின் பூர்வீகத் தமிழருக்கும் ஆட்சியில் சமபிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்று பல வழிகளிலும் தமது வாதங்களை முன்வைத்தனர்.

அத்தோடு தமிழருக்கு அவர்களது பாரம்பரிய பிரதேசத்தில் தனியான ஆட்சி அலகு தரப்பட வேண்டும் என்ற கொள்கைகளை முன்வைத்தமை பற்றியும் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அரசுரிமைக்கான இவ்வாறான தொடர்ச்சியான வாதங்களும் பிரதிவாதங்களும் தமிழரின் தேசிய எழுச்சியின் படிக்கற்களாக அமைந்திருப்பதைப் பார்க்கலாம்.

துரதிர்ஷ்டவசமாக 1947 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு பெரும்பான்மை மக்களின் அரசியல் தலைவர்களிடம் நாட்டை ஆளும் பொறுப்பை ஒப்படைத்தது.

பிரித்தானிய வெஸ்ற்மினிஸ்டர் பாராளுமன்ற அமைப்பு முறையில் தயாரிக்கப்பட்ட சோல்பரி அரசியல் யாப்பு எந்த வகையிலும் இலங்கை போன்ற பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டிற்குப் பொருத்தமாக அமையமாட்டாது என்பது பற்றியும் ஏற்கனவே ஆராயப்பட்டது.

சிறுபான்மையினரின் அரசியல் நலன்கள், அரசியல் உரிமைகள் என்பவை பற்றி எவ்வாறான கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் கருத்திற் கொண்டு சோல்பரி பிரபுவும் அவரது ஆணைக்குழுவினரும் சோல்பரி அரசியல் திட்டத்தை அமுல்படுத்தினார்களோ அவர்களது அத்தனை திட்டங்களும் கருத்துகளும் நம்பிக்கைகளும் நிறைவேற்றப்படாது புறந் தள்ளப்பட்டுள்ளது.

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படவிருப்பதை 1947 இலேயே நன்கு அறிந்திருந்த டி.எஸ். சேனநாயக்கவும் அவரது அமைச்சரவையும் தமிழ் அரசியல் தலைவர்களினதும் ஏனைய சிறுபான்மையின அரசியல் தலைவர்களினதும் ஆதரவைப் பெற்று பிரித்தானிய அதிகார வர்க்கத்துக்கு தன்மேல் நம்பிக்கை ஏற்படும்படி செய்வதன் பொருட்டு அவர் மிகவும் திட்டமிட்டுத் தமது அரசியல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியிருந்தார் என்பதனை 1947 ஆம் ஆண்டுத் தேர்தலும் அதனைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட பாராளுமன்றமும் சுதந்திரத்திற்குப் பின்னர் நடைபெற்ற அரசியல் நிகழ்வுகளும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ் அரசியல் தலைவர்கள் எவ்வாறு 1947 ஆம் ஆண்டுத் தேர்தலில் டி.எஸ். சேனநாயக்கவினாலும் அவரது குழுவினராலும் தந்திரமாக ஏமாற்றப்பட்டனர் என்பது பற்றியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலமும் ஏனைய தெரிவு செய்யப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் எவ்வாறு ஒட்டு மொத்தமாக தமது சமபிரதிநிதித்துவக் கோரிக்கையைக் கைவிட்டு இளகு நிலை ஒத்துழைப்பு (Responsive Cooperation) என்ற மாயை வார்த்தையினால் தமிழ்த் தேசத்தையே ஒட்டு மொத்தமாக ஏமாற்றினார்கள் என்பது பற்றியும் இதற்கு முன்னைய அத்தியாயத்தில் மிகவும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக்கூறின் ஆறுமுகநாவலரால் 1850களிலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழர் கலாசார தேசிய விழிப்புணர்வும் எழுச்சியும் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டம் வரை தொடர்ச்சியாகப் பல சாதகமான பாதிப்புக்களை ஏற்படுத்தியிருந்தன.

1920களிலிருந்து சேர்.பொன். அருணாசலத்தால் தோற்றுவிக்கப்பட்ட அல்லது கருப்பெற்ற தமிழர் தேசியவாத எழுச்சி 1924களில் அவரது மறைவுடன் ஒரு தேக்கநிலையை அடைந்தது. அதன்பின்னர் கொழும்பைத் தமது வாழ்விடமாகக் கொண்ட தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழரின் அரசியல் எதிர்காலத்தையிட்டு எதுவித தூரநோக்குமின்றிச் செயற்பட்டமையே தமிழர் தமது அரசியல் தேசியத்தை 1948 இல் வென்றெடுக்க முடியாமல் போனதற்கான காரணமாக அமைந்ததை வரலாறு காட்டுகின்றது.

இருந்தும் 1930களிலிருந்து இடம் பெற்ற பல்வேறு அரசியல் நிகழ்வுகள் குறிப்பாக சமபிரதிநிதித்துவக் கோரிக்கை, வடக்கு- கிழக்கிற்கான ஆட்சியுரிமைக் கோரிக்கை என்பன தமிழர் தேசிய எழுச்சியை வேகப்படுத்திய செயல்களாக அமைந்திருக்கின்றன என்று கூறுவதில் தவறில்லை.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னரான அரசியல் நடவடிக்கைகள் தமிழர் தேசிய எழுச்சியை மேலும் மிகவேகமாக விரிவுபடுத்திச் சென்றன. சுதந்திரத்தின் பின்னதான அரசியல் நடவடிக்கைகள் சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் எவ்வாறு சோல்பரி அரசியல் யாப்புக்கு முரணாகச் செயற்படுத்தப்பட்டன என்பதனையும் தமிழ் அரசியல் தலைவர்களின் தொடர்ச்சியான அரசியல் நடவடிக்கை ஈற்றில் இலங்கைப் பெரும்பான்மை அரசின் நடவடிக்கைகள் காரணமாகத் தவிர்க்க முடியாதவாறு 1970களிலிருந்து தமிழரின் சுதந்திரப் போராட்டத்திற்கு இட்டுச் சென்றது என்பது பற்றியும் தொடர்ந்து ஆராய்வது அவசியமாகின்றது.

(தொடரும்)

# அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலையில் உண்ணாவிரதப்போராட்டம்





(திருமலை)
அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து திருகோணமலை இராவண சேனா அமைப்பால் உண்ணாவிரதப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த உண்ணாவிரதப்போராட்டம் நேற்றுக் காலை முதல் திருகோணமலை-உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட DIVINE MERCY SHRINE கத்தோலிக்க தேவாலயத்திற்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திருகோணமலையில் இயங்கி வருகின்ற இராவணா சேனா அமைப்பின் தலைவர் கே.செந்தூரன் தலைமையில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப் படுகிறது.

இதேவேளை திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்பாக திருக்கடலூர் பகுதியைச் சேர்ந்த வில்வராசா ஐயவேந்திரனால் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அச்சு,இலத்திரனியல் ஊடகங்களில் மதூஷின் பெயர் 26,000 முறை உச்சரிப்பு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் தகவல்



(கொழும்பு)
டுபாயில் கைதுசெய்யப்பட்டிருந்த பிரபல பாதாள உலகத் தலைவன் மாகந்துரே மதூஷின் பெயரை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் 26,000முறைக்கு அதிகமாக உச்சரித்துள்ளதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மாகந்துரே மதூஷ் என அழைக்கப்படும் சமரசிங்க ஆராச்சிலாகே மதூஷ் லக்ஷித கடந்த மாதம் 5 ஆம் திகதி டுபாயிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டான். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இவனிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

நாட்டிலிருந்து தப்பிச்சென்று டுபாயில் வாழ்ந்த மாகந்துரே மதூஷ் உள்ளிட்ட குழுவினர், கடந்த பெப்ரவரி 5 ஆம் திகதி போதைப்பொருளுடன் டுபாயிலுள்ள ஹோட்டலொன்றில் கைது செய்யப்பட்டனர். மதூஷுடன் 30 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் நாடுகடத்தப்பட்டதுடன், பெரும்பாலானவர்கள் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர். கஞ்சிபானை இம்ரான் உள்ளிட்ட சிலர் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

மாகந்துரே மதூஷ் கைது செய்யப்பட்ட நாள்முதல் கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறும் வரை இலங்கையிலுள்ள அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் இவரது பெயருடன் கூடிய செய்திகளே பிரதான செய்திகளாக இடம்பெற்றிருந்தன.

அதன் அடிப்படையில்தான் 26,000 முறை மதூஷின் பெயர் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் வெளியானதாக சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ-7)




### ஆருண்யன்

சன்டே அதுவுமா கறிக்கடைக்குப் போற ஆர்வம் வாழ்க்கைல மத்த விடயத்திலயும் இருந்தா எப்பவோ முன்னேறி இருப்போம் சரி கறி தீர்ந்திடப் போகுது! சீக்கிரம் போய் வாங்குவோம்



### பிரணவி

உங்கள் ஒருவிரலை அந்தப் பிஞ்சு ஐந்து விரல்கள் பிடிக்கும் போது... இந்த உணர்வை அனுபவித்திருக்கிறீர்களா?



### றக்ஷிதா

நல்ல குடும்பம்




### சித்தார்த்

என் பொண்டாட்டிய விட என் பொண்டாட்டி புடவையே எனக்கு மரியாதை தருது... எப்படி பீரோ திறந்த உடனேயே என் கால்ல விழுது



### ருசாங்கன்

பேஸ்புக் நோக்கி,...



மற்ற புக் நோக்கி...



### ஹறித்

அண்ணே வாழ்க்க ஒரு வட்டம்ணே
எப்படிடா கண்டுபிடிச்ச
என் வாழ்க்கைல ரொம்ப பிடிச்சது இட்லியும் தோசையும் தான். இரண்டுமே வட்டம்ணே



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

### நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# அயராது உழைக்கும் ஆயுதப் படையினருக்கு

# முஸ்லிம்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## மனிதவுரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் அசீம் வலியுறுத்து

(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஆயுதப்படையினரும், பொலிஸாரும் அயராது உழைக்கும் இந்தத் தருணத்தில் அவர்களுக்கு உரிய ஒத்துழைப்பை வழங்குமாறு முஸ்லிம் சமூகத்தினரிடம் கேட்டுக்கொள்வதாக மனித உரிமைகள் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் எம்.என்.எம். அசீம் தெரிவித்தார்.**

கடந்த 30 வருடகால யுத்தத்திலிருந்து மீண்டு 10 வருடங்கள் நாட்டில் அமைதி நிலவியது. இவ்வாறான சூழ்நிலையிலேயே அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் மிலேச்சத்தனமாக குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

அதற்கு அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகின்றோம். இதிலிருந்து மீண்டு நாட்டை எழுச்சிப்பாதையில் இட்டுச் செல்வதற்கான ஒத்துழைப்பை வ்ழங்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

அவசரகாலச் சட்டம் அமுலிலுள்ள இந்தத் தறுவாயில் சந்தேகத்தின் பேரில் எவராயினும் கைதுசெய்யப்படும் பட்சத்தில் ஊடகங்களில் பெருமளவில் அந்த நபர் தொடர்பில் பேசப்படுகின்றது.

பின்னர் அவர் நிரபராதியாக விடுவிக்கப்படும் பட்சத்தில் அவர் தொடர்பிலான கவனம் செலுத்தப்படுவதில்லை.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் அந்த நபருக்கு சமூகத்தின் மத்தியில் இணைந்து வாழ்வதற்கான நிலையும், மனித உரிமையும் வெகுவாக பாதிப்புக்குள்ளாகின்றது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டியது அவசியமானதாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடுத்த கட்ட நகர்வுகளில் இணைவதற்கு அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் தயார்

## இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் தெரிவிப்பு



(கொழும்பு)

சமகால நாட்டு நடப்புக்கள் தொடர்பில் அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் இணைந்து செயலாற்றுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் பங்காளர்களாகிய நாம் வகிக்கும் அமைச்சுப் பதவிகளின் மூலமாக வெறும் அபிவிருத்திகளை மாத்திரம் மக்கள் எம்மிடம் எதிர்பார்க்கவில்லை, அவர்களது பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தையும், சகய நிலையினையும் அனைத்துப் பிரஜைகளுக்குமுள்ள மனித உரிமையுடன் கூடிய அம்சங்களையும் வேண்டி நிற்கிறார்கள், அவற்றை உறுதி செய்வது எமது முழுமுதற் கடமையாகும்.

இவற்றை செய்யாமல் அமைச்சுப் பதவிகளை அலங்கரிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. மக்களின் நலன்சார் விடயங்களை முன்னெடுப்பதற்காக அனைவரும் கட்சி, அரசியல் பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயலாற்ற முன்வர வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சமகால நிகழ்வுகள் தொடர்பில் எமது கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் பல்வேறு முன்னெடுப்புக்களை நாம் மேற்கொண்டு வருகிறோம்.

அனைத்து முஸ்லிம் பிரதிநிதிகளும் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் இணைந்து செயலாற்றி அனைவரும் ஒருமித்து சில தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பாதகத்தில் ஏற்பட்டுள்ள சாதகமாகக் கருதி இதனை அனைவரும் பக்குவமாக அணுக வேண்டும்.

ஆகவே மக்கள் நிதானமாகவும் பொறுமையோடும் ஒற்றுமையுடன் நடந்து கொள்வது அவசியமாகும்.

அரசியல் காரணங்களுக்காக முஸ்லிம்கள் மீதான வெறுப்புப் பிரசாரங்களை கடந்த காலங்களில் முன்னெடுத்து வந்த முகவர்கள் ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதலை மையமாக வைத்து நேரடியாக முஸ்லிம்களின் உயிர், உடைமைகள், பொருளாதாரத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

இதனால் சில பகுதிகளில் உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளன, முஸ்லிம்கள் தமது புனித றம்ழான் கடமைகளை அனுஷ்டிக்க முடியாமல் அல்லற்பட்டனர்.

மிகக் கேவலமான முறையில் வணக்கஸ்தலங்கள் குறி வைக்கப்பட்டன, இவ்வாறான செயலில் ஈடுபட்ட காட்டுமிராண்டிகளுக்கும் மக்களை குறி வைத்து தாக்குதல் நடத்திய தீவிரவாதிகளுக்குமிடையில் வேறுபாடுகள் எதுவும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர் ராஜித, உலக சுகாதார நிறுவனத்தின் உப தலைவராக 2 வது தடவையாகவும் தெரிவு



சுகாதார போசணைகள் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சர் ராஜித சேனாரட்னவுக்கு உலக சுகாதார நிறுவனம் இரண்டாவது முறையாகவும் அதன் உப தலைவர் பதவியை வழங்கியுள்ளது.

சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரிலுள்ள 194 உறுப்பு நாடுகளைக் கொண்ட இந்த உலக சுகாதார அமைப்பின் நிறைவேற்று உறுப்பினர்கள் 35 பேரைக் கொண்ட சபையில் அமைச்சர் இவ்வாறு உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் கட்டார் விமான சேவைக்குச் சொந்தமான கியு. ஆர். 668 ஆம் இலக்க விமானத்தில் நேற்று முன்தினம் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்தார்.

நாட்டை வந்தடைந்த அமைச்சருக்கு களுத்துறை மாவட்ட பிரதான மகாநாயக்கர்களால் ஆசீர்வாதம் வழங்கப்பட்டதுடன், அமோக வரவேற்பும் அளிக்கப்பட்டது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 |
| தக்காளி | 100 | 110 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 100 |
| கோவா | 120 | 80 | 120 |
| கரட் | 160 | 80 | 240 |
| பூசணி | 70 | 50 | 80 |
| புடோல் | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 55 | 80 |
| சின்ன வெங்காயம் | 100-200 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 95 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 100 |
| லீக்ஸ் | 110 | 90 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 120 |
| கறிமிளகாய் | 140 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 160 |
| போஞ்சி | 140 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 80 |
| கீரை-1பிடி | 30 | 20 | 80 |
| தேசிக்காய் | 280 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 20-40 |
| இராசவள்ளி | 150 | 100 | 140 |
| வெங்காயப்பூ | — | 200 | 240 |
| முள்ளங்கி | 80 | 70 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 30 | 10 | 20 |
| ஐரப்பலா | 60 | — | 120 |




# ராஜகுருவைப் பழிக்குப் பழி வாங்குதல்



ஒரு நாள் அதிகாலை நேரம் ராஜகுரு குளத்துக்குக் குளிக்கச் சென்றார். அப்போது அவரை அறியாமலேயே தெனாலிராமன் பின் தொடர்ந்தான். குளக் கரையை அடைந்ததும் ராஜ குரு துணிமணிகளை எல்லாம் களைந்து கரையில் வைத்து விட்டு நிர்வாணமாக குளத்தில் இறங்கி குளித்துக் கொண்டிருந் தார். மறைந்திருந்த தெனாலி ராமன் ராஜகுருவின் துணி மணிகளை எடுத்துக்கொண்டு மறைந்து விட்டான்.

குளித்து முழுத்து கரையேறிய ராஜகுரு துணிமணிகளைக் காணாது திடுக்கிட்டார். உடனே தெனாலிராமன் அவர் முன் தோன்றினான்.

தெனாலிராமன் எனது துணி மணிகளைக் கொடு என்று கெஞ் சினார். அதற்குத் தெனாலிராமனோ உன் துணிமணிகளை நான் பார்க்கவில்லை. நானும் குளிக்கவே இங்கு வந்துள்ளேன். என்னிடம் வம்பு செய்யாதீர்கள் என்றான்.

ராமா... என் துணிமணிகளைக் கொடுத்துவிடு. இன்னும் சிறிது நேரத்தில் நன்கு விடியப்போகிறது. இக்குளத்துக்கு பெண்கள் குளிக்க வந்து விடுவார்கள். உடனே என் துணி மணிகளைக் கொடு என்று மீண்டும் மீண்டும் கெஞ்சினார்.

அவர் கெஞ்சுதலைக் கேட்ட தெனாலிராமன் என் நிபந்தனைக்கு உடப்பட்டால் உம் துணி மணிகளைத் தருகிறேன். இல் லையேல் தர முடியாது என்று கூறி விட்டான். என்னை அரண் மனை வரை உன் தோளில் சுமந்து செல்ல வேண்டும். அப்படியென்றால் தருகிறேன். இல்லையென்றால் தரமுடியாது என்று கூறி விட்டான்.

தெனாலிராமன் மிகப் பொல்லாதவன் என அறிந்து கொண்ட ராஜகுரு சம்மதித்தார். பின் துணிமணிகளை ராஜகுருவிடம் கொடுத்தான். உடையணிந்து கொண்ட ராஜகுரு தெனாலிராமனை தன் தோள் மீது சுமந்து சென்று கொண்டிருந்தார். இதை ஊர் மக்கள் அனைவரும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதை மன்னர் கிருஷ்ண தேவராயரும் உப்பரிகையிலிருந்து பார்த்து விட்டார். உடனே தனது காவலாளிகளுக்கு உத்தர விட்டார். அதாவது தோள் மேல் இருப்பவனை நன்கு உதைத்து என்முன் நிற்பாட்டுங்கள் என்று. உப்பரிகையிலிருந்து மன்னன் பார்த்து விட்டதை அறிந்த தெனாலிராமன், அவர் தோளிலிருந்து இறங்கி அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் ஐயா என்னை மன்னியுங்கள். ராஜ குருவை அவமானப்படுத்திய பாவம் என்னைச் சும்மாவிடாது. ஆகையால் என் தோள் மீது தாங்கள் அமருங்கள். நான் உங்களை சுமந்து செல்கிறேன் என்றான். அவன் பேச்சை உண் மையென்று நம்பிய ராஜகுரு தெனாலிராமன் தோள்மீது உட் கார்ந்து கொண்டான். தெனாலி ராமன் ராஜகுருவை சுமந்து சென்று கொண்டிருக்கையில் காவலாட்கள் அருகில் வந்துவிட் டனர். ராஜகுருவை நையப்புடைத்து மன்னர் முன் நிற்பாட்டினார்கள்.

இதைப் பார்த்த மன்னர் ராஜ குருவை ஏன் அடித்தீர்கள் என வினவினார். அதற்கு காவலாட் கள் தெனாலிராமன் தோள் மீது அமர்ந்து இருந்தவர்தான் இந்த ராஜகுரு. தாங்கள் தானே தோள் மீது அமர்ந்திருப்பவரை அடித்து உதைக்கச் சொன்னீர்கள். அதன் படியே செய்துள்ளோம் என்றனர். மன்னர் ராஜகுருவை அழைத்து விபரத்தைக் கேட்டார். ராஜகு ருவும் தன் தவறை உண்மை யென்று ஒத்துக்கொண்டார். தெனாலிராமன் செய்கை மன் னருக்கு நகைச்சுவையுண்டு பண்ணினாலும் அவன் செய்த தவறுக்கு தக்க தண்டனை வழங்க விரும்பினார்.

ஆகையால் தெனாலிராமனை அழைத்து வர அரண்மனை காவலாட்களை அனுப்பினார். காவலாட்களும் தெனாலிராமனை சிறிது நேரத்தில் மன்னர் முன் கொண்டு வந்து நிற்பாட்டினார் கள்.

தெனாலிராமன் நீ ராஜகுருவை அவமானப்படுத்திவிட் டாய். மேலும் அவரை உதையும் வாங்க வைத்துவிட்டாய். இது மன்னிக்க முடியாத குற்றமாகும். ஆகவே உன்னை சிரச்சேதம் செய்ய உத்தரவு இடுகிறேன் என்றார் மன்னர்.

இதைக் கேட்ட தெனாலிராமன் தன் உயிருக்கு ஆபத்து வந்ததை எண்ணி வருந்தினார். அவன் தன் இஷ்ட தேவதையான காளி தேவியை தன்னைக் காப் பாற்றும்படி மனதிற்குள் துதித் தான்.

காவலாட்களும் அவனை கொலை செய்ய அழைத்துச் சென்றார்கள். அப்போது அவர்களிடம் தன்னை விட்டுவிடும்படியும் பணமும் தருவதாகவும் வேண்டினான். காவலாட்களும் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவனது வேண்டுகோளுக்கு இணங்கி கொலை செய்யாமல் விட்டு விட்டனர். இனி இவ்வூரில் இருக்காதே, வேறு எங்காவது போய்விடு என்று சொன்னார்கள். அவர்களிடம் அப்படியே செய்கிறேன் என்று சொல்லிய தெனாலிராமன் தன் வீட்டிலேயே ஒளிந்து கொண்டான்.

காவலாட்களும்ஒருகோழியை அறுத்து அதன் இரத்தத்தை வாளில் தடவி மன்னரிடம் தெனாலிராமனை கொலைசெய்து விட் டோம் என்று சொல்லி விட்டனர். மன்னரும் இதை உண்மை என்று நம்பினார்.

தெனாலிராமன் கொலை செய்யப்பட்ட செய்தி ஊர் முழுவதும் தீ போல் பரவியது. அப்போது சில அந்தணர்கள் மன்னரைச் சந்தித்தனர். நியாயமாக ஒரு பார்ப்பனரைக் கொன்றது மிகக்கொடிய பாவமாகும். அவனது ஆவி தங்களுக்கும் நாட்டுக்கும் கேடு விளைவிக்கும் என் றனர். இதைக்கேட்ட மன்னர் கலங்கினார்.

இதற்குப் பரிகாரம் என்ன வென்று மன்னர் கேட்டார். அதற்கு அந்தணர்கள் அவன் ஆவி சாந்தி அடைய அமாவாசை அன்று நள்ளிரவு சுடுகாட்டிற்குச் சென்று பூஜை செய்தால் நலம் என்றனர். உடனே மன்னர் ராஜகுருவை அழைத்து அமாவாசையன்று நள்ளிரவு சுடுகாட்டில் தெனாலிராமன் ஆவிக்கு பூஜை செய்ய உத்தரவு விட்டார். இதைக் கேட்ட ராஜகுரு நடுநடுங்கினார். நடுகாட்டில் நள்ளிரவு நேரத்தில் பூஜை செய்வது என்றால் எனக் குப்பயமாக இருக்கிறது என்றார். அப்படியென்றால் துணைக்கு சில புரோகிதர்களையும் அழைத்துச் செல்லுங்கள் என மிகக் கண்டிப் புடன் மன்னர் கட்டளையிட்டார்.

மன்னர் கட்டளையை மீற முடியாத ராஜகுரு பூஜைக்கு ஒத் துக்கொண்டார்.

அமாவாசை அன்று நள்ளிரவு புரோகிதர்கள் சகிதம் சுடுகாட்டிற்குச் சென்று பூஜை நடத்தினார்கள். ராஜகுரு பூஜையின் இறுதியில் அங்கிருந்த மரத்தை மேல் நோக்கிப் பார்த்து தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்ம ராட்சசனே என்று பலத்த குரலில் அழைத்து எங்களுக்கு ஒரு தீங்கும் செய்யாதே... உன் ஆன்மா சாந்தியடைய பூஜை செய்துள்ளோம் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே மரத்திலிருந்து ஓர் உருவம் பயங்கர சத்தத் தோடு கீழே குதித்தது.

இதைப்பார்த்த ராஜகுருவும் புரோகிதர்களும் பயத்தால் நடு நடுங்கி அலறி அடித்துக்கொண்டு அரண்மனைக்கு ஓடினார்கள். அப்போது நடுநிசி நேரமாதலால் மன்னர் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார். இருப்பினும் மன் னரை எழுப்பினார். நடந்தவற்றை நடுக்கத்தோடு கூறினார். இதைக் கேட்ட மன்னர் இதற்கு பரிகாரம்காண ஆழ்ந்த யோசனை செய்தார். பின் ஒரு முடிவுக்கு வந்தார். தெனாலிராமன் ஆவியாகிய பிரம்மராட்சசனை ஒழித் துக்கட்டி நாட்டிற்கு நன்மை உண்டாகச் செய்பவர்களுக்கு ஆயிரம் பொன் பரிசளிக்கப்படும் என்று பறைசாற்றி அறிவிக்கச் செய்தார்.

இதைக் கேட்ட நாட்டு மக்கள் யாரும் பிரம்மராட்சசனை ஒழித் துக்கட்ட முன் வரவில்லை. சில நாட்களுக்குப்பின் ஒரு துறவி மன்னரைக் காண வந்தார். மன்னரும் அந்தத்துறவியிடம் தெனாலிராமனின் ஆவியாகிய பிரம்ம ராட்சசனை ஒழித்துக் கட்டும்படி வேண்டினார். இதைக் கேட்ட துறவியர், மன்னர் பெருமானே, கவலையை விடுங் கள், பிரம்மராட்சசனை என் னால் முடிந்தளவு ஒழித்துக்கட்ட முயற்சிக்கிறேன். இது நிரந்தரமான ஏற்பாடாக இருக்காது. மீண்டும் தெனாலிராமன் உயிர் பெற்று வந்தால் தான் பிரம்ம ராட்சசனுடைய அட்டகாசம் சுத்தமாக குறையும் என்றார்.

அப்படியானால் தங்களால் மீண்டும் தெனாலிராமனை உயிர்ப்பிக்க முடியுமா? என வினவினார் மன்னர். ஓ... தாராளமாக என்னால் முடியும் என்றார் துறவி.

மன்னர் மகிழ்ந்து தாங்கள் தெனாலிராமனை உயிர்ப்பித் துக் காட்டுங்கள். அதுவே எனக் குப் போதும் என்றார். உடனே துறவியார் தான் அணிந்திருந்த வேடத்தைக் களைந்தார். நான் தான் தெனாலிராமன். துறவி வேடத்தில் வந்தேன் என்றார்.

இதையறிந்த மன்னர் மகிழ்ந்து தெனாலிராமனைக் கட்டித் தழுவிக் கொண்டார். பின் ஆயிரம் பொன் பரிசளித்தார்.

## பொது அறிவுத் துணுக்குகள்

• தபால்பெட்டிக்கு சிவப்பு நிறம் பூசும் பழக்கம் முதன் முதலில் 1876 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தொடங்கப் பட்டது.

• செவ்வாய்க் கிரகத்தில் தொடர்ந்து 250 நாட்களுக்கு பகலாகவே இருக்கும்.

• அட்லாண்டிக் பெருங்கடலின் ஆழம், 8 ஆயிரத்து 381 மீற்றர்கள்.

• ஒளிவிடும் தன்மை கொண்ட உலோகம், சீர்கான்.

• உலக சிகரங்களில், மூன்றாவது பெரிய சிகரம், கஞ் சன் ஜங்கா.

• சேர்ஜகநியூட்டன்உருவாக்கிய கணித வகை, கால்குலஸ்.

## வித்தியாசங்களைத் கண்டுபிடியுங்கள்





“மாசம் 6000 கட்டுங்க, நீங்க ரிடையர் ஆகும் போது ஒரு கோடி ரூபாயா தரோம்” ன்னு சொன்னாங்க. நான் சொன்னேன்...

“எனக்கு இப்போ ஒரு கோடி தாங்க... நான் மாசா மாசம் 6000 ரூபாயா திருப்பி தரேன்” னு சொன்னேன்...

கட் செய்து வச்சுட்டாங்க. நான் ஏதாவது தப்பா கேட்டேனா...

ஒரு நாடு சுபீட்சத்துடன் வாழ அந்நாட்டு மக்கள் ஒழுக்கம் உள்ளவர்களாக இருத்தல் அவசியம்.
- தந்தை பெரியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பிரதமர் மோடியின் அரசாங்கத்தை தமிழர்கள் பக்கபலமாக்க வேண்டும்

இலங்கை அரசாங்கமோ அல்லது இலங்கைத் தமிழ் மக்களோ அண்டைநாடான இந்தியாவுடன் பகைத்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாதென்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது.

இந்தியா நமக்கு அண்டை நாடு என்பதற்கு அப்பால், எங்கள் தமிழகத்து உடன்பிறப்புகள் வாழுகின்ற தேசம் என்ற அடிப்படையிலும் ஈழத் தமிழர்கள் இந்தியாவுடனான உறவைத் தள்ளி வைக்க முடியாது.

காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கையில் நடக்கின்ற கலவரங்களின் போதெல்லாம் இந்தியாவின் நிலைப்பாடு என்ன? என்பதை அறிவதிலேயே தமிழ் மக்கள் அதீத கவனம் செலுத்துவர்.

எனினும் 1987 மற்றும் 2009 ஆகிய காலப்பகுதிகள் ஈழத் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்குமிடையில் கசப்பான - வெறுப்பான சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது.

என்ன செய்வது, கெடுகாலம் என்று எண்ணி பகைமை மறந்து மீண்டும் இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதுதான் ஈழத் தமிழ் மக்களின் புத்திசாலித்தனமாக இருக்க முடியும்.

அதிலும் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்துடன் ஈழத் தமிழ் மக்கள் நல்லுறவைப் பேணுவதிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடியைக் கோருவதும் சாத்தியமானவை.

எனவே தொடர்ந்தும் பகை உணர்வுடன் நாம் செயற்படாமல், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்துடன் நாம் நல்லுறவைப் பேணிக் கொண்டு எங்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இதனை நாம் கூறுவது தொடர்பில் சிலர் விமர்சனம் செய்யவும் தலைப்படுவர்.

ஆனால் இப்போதிருக்கின்ற சூழ்நிலையானது விமர்சனத்துக்கும் விதண்டாவாதத்துக்குமுரியதல்ல.

மாறாக, இலங்கை அரசாங்கம் நடந்து கொள்கின்ற வெளிநாட்டு இராஜதந்திர அணுகுமுறைகளினூடு நாம், இந்திய அரசின் ஆதரவை நமக்குரியதாக்க வேண்டும். இதுவே இன்றைய தேவையாகும்.

பொதுவில் இலங்கை அரசாங்கம் சீனாவுடனான உறவை வலுப்படுத்திக் கொண்டதில் இருந்து, இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையின் போக்கில் அதிருப்தி கொண்டுள்ளன.

உலகப் பொது ஒழுங்கின் காரணமாக இந்தியாவும் அமெரிக்காவும் இலங்கையுடன் நட்புறவைப் பேணிக் கொள்கின்றதாயினும் சந்தர்ப்ப சூழ்நிலை கிடைக்கும்போது, இலங்கை மீதான தமது எதிர்ப்பை இந்தியாவும் அமெரிக்காவும் நிச்சயம் வெளிப்படுத்தும்.

எனவே மேற்படி சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னதாக பிரதமர் மோடியின் அரசுடன் நாம் நெருக்கமான உறவை ஏற்படுத்திக் கொண்டு, அவருடன் சில உடன்படிக்கைக்கு வருவது மிகச்சிறந்தது.

இதனை இப்போதே முன்னெடுப்பது உத்தமமாகும்.

### புலிகளிடம் தனியலகு கோரிய முஸ்லிம் தலைமைகள்

# வடக்கும் கிழக்கும் இணைவதை எதிர்க்கும் முதலாவது முஸ்லிம் பிரதிநிதி ஹிஸ்புல்லா

## கருணா வெளிப்படுத்தல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்திற்காக ஆயுத போராட்டத்தை முன்னெடுத்த போது முஸ்லிம் தலைமைகள் தனியலகு கோரிக்கையை முன்வைத்தனர் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் பிரதியமைச்சருமான கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கொழும்பு பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

கேள்வி - விடுதலைப் புலிகளின் தலைமைக்கும் முஸ்லிம் தலைமைகளுககுமான சந்திப்பின் போது தனியலகு பற்றி பேசப்பட்டதா?

பதில் - முஸ்லிம் தலைமைகள் பேச்சுவார்த்தைகளின் போது தனியலகு கோரிக்கையை முன்வைத்திருந்தார்கள். குறிப்பாக நோர்வே தலைமையிலான பேச்சுக்களின் போது ஹக்கீம் தலைமையிலான பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

ஆனால் நாம் அதனை ஏற்று கொண்டிருக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கு இணைந்த தாயகத்திற்காகவே ஆயுத போராட்டத்தை முன் னெடுத்து இருந்தார்கள். வடக்கு-கிழக்கு என்பது தமிழர்களின் தாயகம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

முஸ்லிம்கள் வர்த்தக நோக்கத்திற்காக கிழக்கில் வந்து களமிறங்கியவர்களாக காணப்படுகின்றார்கள். முதன்முதலாக முஸ்லிம் ஆண்களே கல்முனைக் குடியில் வந்திறங்கினார்கள்.

இவ்வாறு தான் அவர்களின் வரலாறு இருக்கின்றது. அப்படியிருக்கையில், வடக்கு-கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகம். தமிழர்களுக்கு தாயகம் கிடைக்கின்ற போது முஸ்லிம்களுடன் பேச்சுகளை நடத்தி தீர்வை வழங்குவோம் என்ற முடிவுக்கே வந்திருந்தோம்.

ஏனென்றால் தனிநாடு கோரி நாம் போராடிக் கொண்டிருக்கையில், முஸ்லிம்களும் தனியலகைக் கோருகையில் அது கிடைப்பதென்பது சாத்தியமற்ற விடயமாகும்.

அதற்காக முஸ்லிம்களை எமது நிர்வாகத்திற்குள் அடக்குவதற்கு நாம் விரும்பவில்லை.

ஆனால் முஸ்லிம்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வடக்கும் கிழக்கும் இணைவதை எதிர்ப்பதில் முதலாவது முஸ் லிம் பிரதிநிதி ஹிஸ்புல்லா ஆவார்.

வடக்கு, கிழக்கு இணைந்தால் இரத்த ஆறு ஓடும் என்றார். ஆனால் அவர் என்ன நோக்கத்திற்காக கூறுகிறார் என்பது தெரியாதுள்ளது என கருணா மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் தீர்மானங்களைத் தவிர்க்கவும்

## உள்ளூராட்சி ஆணையகம் உத்தரவு

(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் இன விரிசல்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் உத்தரவிட்டார்.

மாகாணத்திலுள்ள மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் அனைத்துக்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்.மணிவண்ணன் பணிப்புரை விடுத்து உத்தரவுக் கடிதங்களை அனுப்பி வைத்தார்.

அவரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில், "கிழக்கு மாகாணத்திலுள்ள சில உள்ளூராட்சி மன்றங்களில் தேசிய இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் நல்லுறவையும் பாதிக்கும் வகையிலான பிரேரணைகளை முன்வைத்தல், தீர்மானங்கள் நிறைவேற்றல், கலந்துரையாடல்களில் ஈடுபடுதல் போன்ற விடயங்கள் இடம்பெறுவதாக பிரதேச உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களாலும் பொது அமைப்புக்களாலும் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

எனவே, இவ்வாறான விடயங்களை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்குவதற்கு முன்னர் அது குறித்து பூரணமாகப் பரிசீலித்துப் பார்த்து பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பிரேரணைகளைத் தவிர்க்க வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தல் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய மாநகர சபைகளுக்கும், திருகோண மலை, கிண்ணியா, ஏறாவூர், காத்தான்குடி, அம்பாறை உள்ளிட்ட நகர சபைகளுக்கும், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச சபைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# உறவுகளைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆதரிப்பேன்- ஜெய்சங்கர்

(டில்லி)

இலங்கையுடன் தொடர்ந்தும் உறவுகளைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை ஆதரிப்பேன் என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவு அமைச்சரின் புதிய நியமனத்திற்கு நிதியமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் சனிக்கிழமை டுவிட்டரில் வாழ்த்து தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே இந்திய வெளியுறவு செயலர் எஸ்.ஜெயசங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய இராஜதந்திர சேவையில் நீண்ட அனுபவமுடைய எஸ். ஜெயசங்கர் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

நாட்டின் முக்கிய அமைச்சுப் பதவியை செயலாளர் ஒருவர் பெற்றுக்கொண்ட முதல் சந்தர்ப்பமாக இது பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## புலன்வழி அறிவு



ஐம்புலன்கள் வழியாகத் தனக்கும் பிறதோற்றங்கட்கும் அல்லது இருவேறு தோற்றங்கட்கும் இடையே பருமன், விரைவு, காலம், தூரம் ஆகிய நான்கை ஒன்றோடொன்றை ஒப்பிட்டுக் காணும் வேறுபாட்டை உணர்வதும் அவ்வாறு உணரும்போது உடலுக்கும், உயிருக்கும் இடையே ஏற்படும் உயிராற்றலின் சிதைவானது, அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையான பஞ்சதன்மாத்திரை இயக்க அளவு உணர்வு இன்பமாகவோ, துன்பமாகவோ அனுபவமாகக் கொள்வதும் புலன்வழி அறிவாகும்.

மனம் உணர்ச்சியில் எல்லை கட்டித் தனது நிலை மறந்து உணர்ச்சி வயமாகி அறுகுணங்களாகச் சூழ்நிலைகட்கொப்ப மாற்றமடைகிறது. இந்த நிலையில் தான் துன்பங்களைப் பெருக்கும் பழிச் செயல்களும், பதிவுகளும் ஏற்படுகின்றன. உயிரில், மூளையில், வித்தில், உயிரணுக்களில் இப்பதிவுகள் மீண்டும், மீண்டும் பிரதிபலிக்கும் போது அதே செயலைச் செய்ய உயிருக்குத் தூண்டுணர்வு ஏற்பட்டுச் செயல் புரியும் பழக்கம் ஏற்படுகிறது.

இம்முறையில் செயற்படும் அறிவு நிலையை அறிவின் மயக்க நிலை என்றும் - மாயை என்றும் வழங்குகிறோம். இம்மன நிலையில் வாழ்பவர்கள் துன்பக் கருவூலமாக இருப்பதால் இவர்களை நடைப்பிணம் என்று சில ஞானிகள் மொழிந்தனர்.

# வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உதைபந்தாட்டம் சைனிங்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனானது இளங்கதிர் அணி

வல்வெட்டித்துறை வருத்தப்படாத வாலிபர் சங்கமானது தொடர்ச்சியாக 5 ஆவது ஆண்டாக நடத்தும் வல்வைக்குட்பட்ட கழகங்களிற்கிடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதி ஆட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் இளங்கதிர் A அணியினை எதிர்த்து சைனிங்ஸ் A அணியானது மோதியது. இப்போட்டியில் இளங்கதிர் A அணியானது 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

இளங்கதிர் அணியை கபில் இரு கோலினையும் தனுசன் ஒரு கோலினையும் பெற்றுக் கொடுத்தனர். மேலும் மற்றைய கோலானது ஒன்கோல் முறை மூலம் பெறப்பட்டது

"போட்டியின் ஆட்ட நாயகனாக இளங்கதிர் அணியின் கபில்ராஜ் தெரிவு செய்யப்பட்டார்..

தொடராட்ட நாயகனாக சைனிங்ஸ் அணியின் பிரசாந்தும் சிறந்த கோல்காப்பாளராக இளங்கதிர் அணியின் கஜிதரனும் சிறந்த "பின்கள வீரராக விதுஷனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இளங்கதிர் அணியானது இச்சுற்றுத்தொடரின் ஐந்து இறுதியாட்டங்களிலும் மோதியமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் சம்பியனாகியது. இரண்டாமிடத்தினை சைனிங்ஸ் A அணிபெற்றுக்கொண்டது..



இளங்கதிர் அணி



சைனிங் அணி

மூன்றாமிடத்தினை ரேவடி A அணியானது பெற்றுக்கொண்டது.

வெற்றிபெற்ற இளங்கதிர் A அணிக்கு 20000 ரூபா பணப் பரிசிலுடன் வெற்றிக் கிண்ணமும் இரண்டாமிடத்தினை பெற்றுக் கொண்ட சைனிங்ஸ் A அணிக்கு 15000 ரூபா பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாமிடத்தினை பெற்றுக்கொண்ட ரேவடி A அணிக்கு 5000 ரூபா பணப்பரிசிலும் வெற்றிக்கிண்ணமும் வழங்கி கௌரவிக்கப் பட்டது. (க)

அன்பு வாசகர்களே!
உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை
Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும்
Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.
உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

# 51 ஊரெழுச்சி அபிவிருத்தித் திட்டங்களுக்கு 46.27 மில்லியன் நிதி ஒதுக்கீடு



யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான 51 ஊரெழுச்சி அபிவிருத்தி திட்டங்கள் 46.27 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் உத்தியோகபூர்வமாக ஆரம்பம்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசாவின் யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான 200 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட்டின் முன்மொழிவில் மேற்கொள்ளப்படவுள்ள 232 திட்டங்களில் முதலாவது கட்டமாக விலைமனு கோரப்பட்டு ஒப்பந்ததாரரிடம் கையளிக்கப்பட்ட 51 திட்டங்கள் கடந்த 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை. சோ. சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

200 மில்லியன் ரூபாய்க்கான வேலைத்திட்டங்களில் முதற் கட்டமாக வீதிகள் 21.84 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும், 16 வடிகான்கள் 21.43 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலும் 3 விளையாட்டு மைதானங்கள் 2.5 மில்லியன் ரூபாயிலும் 1 சிறுவர் பூங்கா 0.5 மில்லியன் ரூபாயிலும் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றுள் தெரிவுசெய்யப்பட்ட 17 வீதிகளுக்கும் 3 விளையாட்டு மைதானங்களுக்கும் அடிக்கல் நாட்டி வேலைத்திட்டங்களை ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ சேனாதிராசா மேலும் ஒரு சிறுவர் பூங்காவிற்கான வேலைகளையும் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வட்டாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள், முதல்வரின் வட்டார இணைப்பாளர்கள், யாழ்.பிரதேச செயலர் சா.சுதர்சன், யாழ்.மாநகர ஆணையாளர், யாழ்.மாநகர பிரதம பொறியியலாளர், மாநகர பொறியியலாளர்கள், மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அந்தந்தப் பிரிவுகளின் கிராம சேவையாளர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கட்சியின் வட்டார கிளை நிர்வாகிகள், கட்சி அங்கத்தவர்கள், குறித்த பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (க)





கள்ளப்பாடு, அ.த.க.பாடசாலையில் விளையாட்டரங்கிற்கு முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அடிக்கல் நாட்டினார். தமிழ்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரது விசேட ஒதுக்கீட்டிலிருந்து இந்த விளையாட்டரங்கு அமைப்பதற்கு நிதியுதவிகளை வழங்கியுள்ளனர். இந்நிலையில் விளையாட்டரங்கிற்கான அடிக்கல் நிகழ்வானது கடந்த 31 ஆம் திகதி பாடசாலையின் முதல்வர் கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாடசாலையின் அபிவிருத்திச்சங்கச் செயலாளர் வி.பகீரதன் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## மைத்திரியை...

தோன்றுவதாக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ் மாநகர சபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற சமுர்த்தி நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 2015ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாபதித் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியின் பொது வேட்பாளராகத் தற்போது பதவி வகிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அவரது வெற்றிக்கு தமிழ் மக்களும் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுமே பிரதான காரணம். இதை யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி தான் அரியணையில் அமர்ந்து கொண்டதன் பின் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஒன்றும் அறியாதவர் போல் செயற்பட ஆரம்பித்தார். கடந்த டிசம்பர் மாதம் இடம்பெற்ற ஆட்சிக் கவிழ்ப்புச் சூழ்ச்சியின் பிரதான சூத்திரதாரியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தமை எமக்கு கவலையையும் ஏமாற்றத்தையும் தந்தது.

சிறுபான்மைக் கட்சிகளின் ஏகோபித்த பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சிப்பீடம் ஏறியவர் அவ் மக்களின் நலன்களைப் பற்றிச் சிந்திக்காமலும் அம் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்தாலோசிக்காமல் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இழைத்த அநீதியை நன்கறிந்தும் அவரைப்பிரதமராக்கி தன்னுடைய சுயரூபத்தை வெளிக்காட்டினார்.

அக்காலகட்டத்தில் சிறுபான்மைக் கட்சிகள் தமக்கு எதிர்காலத்தில் ஏற்படப் போகும் அபாயத்தை நன்குணர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமது ஏகோபித்த ஆதரவை வழங்கி மீண்டும் ஜனநாயக ரீதியில் அவரைப் பிரதமராக்கினோம்.

அவ்வாறு நாம் செயற்பட்டதால் தமிழ் மக்களின் அடிப்படை அபிவிருத்திகளை முன்னெடுக்கும் வாய்ப்புக்கிட்டியது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் பேசும மக்களின் தலைமைத்துவத்துடன் இணைந்து பணியாற்றுகின்ற போதிலும் ஜனாதிபதியின் தற்கால செயற்பாடுகள் தான் கடந்து வந்த பாதையை மறந்து செயற்படுகிறார் என எண்ணத் தோன்றுவதாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தனது ஆதங்கத்தை மேலும் தெரிவித்தார். (3,10)

## பயங்கரவாத...

க்கை சமர்பிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த அறிக்கையினை இன்று இடம்பெறும் குழுக் கூட்டத்தின் பின்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் ஐ.தே.க உறுப்பினருமான மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

"இந்த சுற்றுநிருபத்தை இன்று குழு உறுப்பினர்களுடன் வழங்கவுள்ளதாகவும் அவர்கள் அதில் ஏதாவது உள்ளடக்க வேணடி ஏற்படின் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் 2 வாரங்களுக்குள் அந்த விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (3)

## இராணுவ ஜீப்...

முல்லைத்தீவு பகுதியில் இருந்து புளியங்குளம் நோக்கி பயணித்த இராணுவ ஜீப் வாகனம் நெடுங்கேணி மகா வித்தியாலயம் அருகாமையில் உள்ள மஞ்சள் கோட்டு கடவைக்கு அருகில் பயணித்த துவிச்சக்கர வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த நெடுங்கேணி சேனைப்புலவைச் சேர்ந்த எஸ்.பேரம்பலம் (வயது 65) என்பவர் சம்பவ இடத்தில் சாவடைந்தார். குறித்த முதியவரின் சடலம் வவுனியா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (3,250)

## தலைவர்கள்...

நிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்பார்கள்.

ஜூன் மாதத்துக்கான முதலாவது பாராளுமன்றக் கூட்டத்தொடர் நாளை ஆரம்பமாகின்றது.

இந்நிலையில், செவ்வாய் முதல் வெள்ளி வரை நடைபெறவுள்ள சபை அமர்வுகளின் போது கலந்துரையாடப்படவேண்டிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கும், திகதிகளை ஒதுக்கீடு செய்வதற்காகவுமே இக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறாத பட்சத்தில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றக் கட்டத்தொகுதியிலுள்ள சபாநாயகர் அலுவலகத்தில் இக்கூட்டம் நடைபெறலாம் எனவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி. ஆகியனவே பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளாகும். (3)

## இந்தியாவின்...

கடப்பாடு இந்தியாவிற்கு எழுந்துள்ளது. வடகிழக்கு இணைப்பு, தாயகத்தில் சுயாட்சி போன்ற கருத்துக்களை நாம் செம்மையாக எடுத்துரைத்தால் இந்தியா ஒரு முக்கியமான விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டி வரும். எமது பிராந்தியங்களில் எமது சுயாட்சி அரசு அமையும் போது அரபிக்கட லும் வங்கக் கடலும் இந்தியாவின் பாதுகாப்புக்காக கைகோர்க்க வேண்டிய நிலை ஏற்படும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் மத்திய குழுக்கூட்டம் நேற்று கந்தர்மடத்திலுள்ள பேரவையின் அலுவலகத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றியபோதே இப்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் இங்கு நடந்த உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் இந்தியாவின் உள்நாட்டு அயல்நாட்டு சவால்களுக்கு மேலதிகமாக தற்போது சர்வதேச இஸ்லாமிய நாடு என்ற IS சவாலையும் இலங்கையினூடாக எதிர் கொள்ள வேண்டியதாக வந்துள்ளது. இலங்கை ஊடாக இஸ்லாமிய தீவிரவாதிகள் இந்தியாவை ஊடுருவுவதற்கான வாய்ப்புக்களை இந்திய புலனாய்வுத் துறை வெளிப்படுத்தி இருந்தது. அதிகாரத்தில் இருந்த எம்மவர்கள் அதுபற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

எனவே மூன்று இஸ்லாமிய அமைப்புக்களின் சவாலானது இலங்கையின் ஊடாக இந்தியாவை வந்து சேரக் கூடும் என்ற பயம் இந்தியாவுக்கு உண்டு. இதனால்தான் முற்கூட்டியே இந்தியா இலங்கை இரண்டுக்கும் வரக் கூடிய இஸ்லாமிய பயங்கரவாதம் பற்றி இந்தியா எமது அரசாங்கத்துக்கு வெளியிட்டு இருந்தது. ஆனால் எமது அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற ஆதங்கம் இந்தியாவிற்கு உண்டு.

தொடர்ந்து வந்துள்ள இலங்கை அரசாங்கங்கள் இந்தியாவை இலங்கையின் வரலாற்று எதிரியாகவே கணித்து வந்துள்ளனர். ஆனால் எம்முடன் நடந்து கொள்வது போன்றே இராஜதந்திர உள்நோக்கத்துடன் இந்தியாவை வெளிப்படையாக நட்பு நாடு என்று காட்டிக் கொண்டாலும் அவர்களது அடிமனதில் இந்தியா எதிரி நாடாகவே கணிக்கப்பட்டு வருகின்றது. அதனால்தான் தமக்கு வாய்ப்பு ஏற்படும்போது எல்லாம் இந்தியாவின் எதிரி நாடுகளுடன் இலங்கை கைகோர்த்து வந்துள்ளது. முக்கியமாக சீனாவுடன் ஆத்மார்த்த உறவைப் பேணி வந்துள்ளது இலங்கை. அண்மையில் குண்டுத் தாக்குதல் நடந்ததும் இலங்கை ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ பயணம் சீனாவிற்கானதாகவே அமைந்தது. இவை யாவும் இந்தியாவால் அவதானிக்கப்பட்டு வருகின்றது.

ஒருவேளை இலங்கைத் தமிழர்களை முற்றாக நசித்து விட்டால் இந்தியாவுடன் நெருங்கிப் பழகாமல் இந்தியாவின் எதிரி நாடுகளுடன் வலுவாகக் கைகோர்க்க முடியும் என்று இலங்கை எண்ணக் கூடும். இதனால்தான் எமது காணிகளை அபகரித்து, இராணுவத்தை உள் நிறுத்தி பல விதத்திலும் எம்மைப் பாதிப்படையச் செய்து வருகின்றார்கள் என்று எண்ண இடமிருக்கின்றது. பல விதங்களில் எம்மைப் பல வீனமடையச் செய்துள்ளன தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள். வடகிழக்கு பிரிக்கப்பட்டு இலங்கை இந்திய ஒப்பந்தச் சரத்துக்களை அர்த்தமற்றதாக்கிவிட்டது இலங்கை. ஆனால் அண்மைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சில புதிய பாடங்களை எமக்குக் கற்பித்துத் தருகின்றது. இந்தியாவின் தெற்கத்தைய கடல்சார் பாதுகாப்பு இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் பின்னணியிலேயே தங்கியுள்ளது என்பதை இந்தியா உணரத் தொடங்கியுள்ளது. புதிய பிரதமர் மோடியின் இரண்டாவது ஆட்சிக்கால முதற் பயணம் மாலைதீவுக்கும் இலங்கைக்கும் அமைவது தற்செயலான ஒரு காரியமாக எனக்குப் படவில்லை.

அதாவது தமிழர்களான எமது பாதுகாப்பை ஊர்ஜிதப்படுத்த வேண்டிய ஒரு கடப்பாடு இந்தியாவிற்கு எழுந்துள்ளது. எமது பரஸ்பர பாதுகாப்பை முன்வைத்து இந்தியாவுடன் சுமூகமான உறவு முறையைப் பேண வேண்டிய அவசியம் இருதரப்பாருக்கும் உண்டு என்பதே எனது கருத்து. வடகிழக்கு இணைப்பு, தாயகத்தில் சுயாட்சி போன்ற கருத்துக்களை நாம் செம்மையாக எடுத்துரைத்தால் இந்தியா ஒரு முக்கியமான விடயத்தைப் புரிந்து கொள்ள வேண்டி வரும். எமது பிராந்தியங்களில் எமது சுயாட்சி அரசு அமையும் போது அரபிக்கடலும் வங்கக் கடலும் இந்தியாவின் பாதுகாப்புக்காக கைகோர்க்க வேண்டிய நிலை ஏற்படும். அப்போது இந்தியாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு கடல் ரீதியான ஊடுருவல் அச்சமின்றி பலமுற்று இருக்க நாங்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்க நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார். (3)

## அரசியல் தீர்வில்...

போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் தீர்வை மையமாக கொண்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் கம்பெரலிய ஊடாக 4000 மில்லியன் ரூபாய் பெறுமதியான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

மயிலிட்டியில் மீன்பிடி துறைமுகத்தை ஸ்தாபிக்கவுள்ளோம். குருநகரில் மீன்பிடி துறைமுகத்தை அமைக்கவுள்ளோம்.

பலாலி வானூர்தி தளத்தை அமைக்க 2500 மில்லிய்ன் ரூபாய் தேவையாகவுள்ளது.

இந்தியாவில் இருந்து நிதியை பெற்று காங்சேன்துறை துறைமுகத்தை புனரமைக்கவுள்ளோம்.

இன்று நாட்டில், நல்லிணக்கம் சிறந்த பாதையை நோக்கி பயணிக்கிறது.

நல்லிணக்கம் சிறந்த பாதையில் பயணிப்பதன் காரணமாக இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு தேவையான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்.

இந்த நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் விலகவில்லை. அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (3)

## பதவி விலகினார்...

செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கமைய ஹிஸ்புல்லாஹ் இராஜினாமா செய்துள்ளார்.

ஹிஸ்புல்லாவின் இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார் என குறித்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் ரிஷாத் பதியூதினை அவரது அமைச்சு பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு அறிவிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜனாதிபதி அறிவித்துள்ளார் என ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரி கூறியுள்ளார். (3)

ரத்ன தேரருக்கு ஆதரவு

## கண்டி முழுவதும் இன்று கடையடைப்பு

(கொழும்பு)

உண்ணாவிரதம் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரருக்கான ஆதரவு வலுத்துக் கொண்டிருப்பதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளுநர்களான ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலி அமைச்சர் ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பதவி நீக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து அத்துரலிய தேரர் உண்ணாவிரத்தினை ஆரம்பித்து இன்றுடன் நான்காவது நாளாகும்.

அவருக்கு அரசியல் வாதிகள் மட்டுமல்ல, தேரர்களும் அதிகளவில் தங்களின் ஆதரவினைத் தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, நேற்றைய தினம் அத்துரலிய ரத்ன தேரரைச் சந்தித்த கலகொட அத்தே ஞானசார தேரர், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் விளைவு விபரீதமாகும் என்று எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில், அத்துரலிய ரத்ன தேரர் ஆரம்பித்துள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில், கண்டி நகர் முழுவதும் இன்று சகல வியாபார நிலையங்களையும் மூடிவிடுவதற்கு தீர்மானம் எடுத்துள்ளதாக கண்டி சிங்கள வர்த்தகர் முன்னணியின் செயலாளர் வஜிர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

முன்னதாக நேற்றைய தினம் அத்துரலிய ரத்ன தேரருக்கு ஆதரவு தெரிவித்து மாத்தளை, ரத்தோட்டை நகரில் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

**தன நிதானய**

திகதி 2019-06-02
சீட்டிழுப்பு இலக்கம் 156
W 11 17 19 67

**கொவிசெத**

திகதி 2019.06.02
சீட்டிழுப்பு இலக்கம் 2136
H 12 33 56 58

**மஹஜன சம்பத**

திகதி 2019/06/02
சீட்டிழுப்பு இலக்கம் 3929
O 5 0 1 9 3 9

**நீரோகா**

திகதி 2019/06/02
சீட்டிழுப்பு இலக்கம் 553
சிம்மம் 07 30 32 36

## வேலை ஆட்கள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல்யமான நியூ லலிதா நகைக்கடைக்கு படித்த வேலை ஆட்கள் தேவை.

இடம்: கிளிநொச்சியில் உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி முன்பாக உள்ள நியூ லலிதா நகை மாடம்.
நேரம்: புதன்கிழமை (05.06.2019) காலை 9.00 மணிக்கு நேரில் சமூகமளிக்கவும். (9020)

## SB Travels and Tours Pvt ltd

சகல நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இந்தியாவுக்கான வீசா விண்ணப்பப்படிவம் 100/= இற்கு நிரப்பிக் கொடுக்கப்படும்.

இந்தியாவுக்கான வீசாவினை எமது நிறுவனத்தின் ஊடாகவும் பெற்றுத்தரப்படும்.



சென்னை (இருவழி) 24600/= இல் இருந்து...

தொடர்புகளுக்கு:-
NO. 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1080, 076 691 1082, 076 691 1083
கொழும்பு - 15:- 0112540280 கொழும்பு - 13:- 0112333322
வெள்ளவத்தை - 011 2361711 (C-6563)

## கடை விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் நவுண்டப்போட் சந்தியில் மருந்துக்கடை, புடவைக்கடை, நகைக்கடை இவை மூன்றும் நடத்தக் கூடிய வகையில் சகல வசதிகளுடன் இருக்கின்றது.

தொடர்புகளுக்கு:
0761119180, 0756434535
வைபர்: 0016478919714 (8998)



FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, அரியாலை. 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம்: 20.01.19 4 ணி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம்: 24.06.19 3.30 pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS, SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## Study in LATVIA

MBBS | Engineering | IT | Management
ஐரோப்பாவில் குடியேறுவதற்கு ஓர் அரிய வாய்ப்பு

Admission open for 2019 Sep Intake



★ நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி பெற்றவரா?
★ IELTS இன்றி உயர் கல்வியினை தொடர்வதற்கான அரிய சந்தர்ப்பம்.
★ கற்கை நெறியுடன் கூடிய பகுதி நேர வேலை வாய்ப்பு.
★ கல்வியின் பின் 26 நாடுகளில் ஒரு நாட்டில் வேலை வாய்ப்புடன் பிரஜா உரிமை பெறும் வாய்ப்பு.
★ 100% விசா உத்தரவாதம்.
★ குறைந்த பாட நெறி கட்டணம்
★ Schengen visa

100% Scholarships Available in ITALY & CHINA (C-6569)

iCS A Complete Visa Solutions Study Abroad
Admissions :- 077 3013060
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
107 B 1/1, Galle Road, Colombo 6



## விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS
UK- 550 /-Kg
கனடா-900 /-Kg
ஜேர்மனி- 700 /-Kg
நெதர்லாந்து-700 /-Kg
●மானிப்பாய் 0768226240
●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●சாவகச்சேரி
●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-6451)


## ரணில் - மகிந்த...

குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து கருத்து தெரிவித்த அவர், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வாய்ப்பு தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (3)

## துப்பா...

கொத்தொட்டுவ, முல்வத்தை பிரதேசத்தில் இடம் பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 40 வயதான நபர்என பொலிஸ் ஊடக பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

நேற்று மாலை 5.45 மணியளவில் இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (3)

## ரயில்...

குழந்தையை யார் கொண்டு வந்து கிடத்தியிருப்பார்கள். பெரியவர்களே ஏற முடியாத ரயில் தண்டவாளத்தில் ஒன்றரைவயதுஆண் குழந்தை எப்படி வந்தது. யாராவதுகொலை செய்வதற்காக திட்டமிட்டு செய்தார்களா என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது

ஏ9 சாலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இந்த சம்பவம்இடம்பெற்றுள்ளது

குழந்தை தாயிடம் ஒப்படைக்கப்பட்டது.என சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் வை.ஜெகதாஸ் தெரிவித்தார். (3.114)


## ஆரம்பக் கல்வி வகுப்புக்கள்

தரம் 2 முதல் 5 வரையான மாணவர்களுக்கான தனி மற்றும் குழு வகுப்புக்கள் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொலைபேசி இல:- 075 711 8891

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
T.P: 077 868 9500 (9023)

TVS



புதிய TVS மோட்டார் சைக்கிள் ஒன்றை சொந்தமாக்க வேண்டுமா? இதோ உங்களது கனவு நிறைவேற.

உங்களிடம் உள்ள அனைத்து வகையான பழைய மோட்டார் சைக்கிள்களுக்கும் புதிய TVS மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

குறைந்த வட்டி வீதத்தில் லீசிங் வசதி செய்து தரப்படும்.

அரச அலுவலர்களுக்கு விசேட சலுகை! மற்றும் மிகக்குறைந்த அளவிலான மாதாந்த கொடுப்பனவுடன் கூடிய சேவை!!

J.P Motors
Manipay & Chankanai
0777 151 110, 077 758 5909
077 129 0712, 021 225 2226

10000/- இல் இருந்து 40000/- வரையான விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்!!!

## வேலைவாய்ப்பு



உங்களின் எதிர்காலத்தினை வெற்றிகரமாக மாற்றிட 100 வருடங்கள் பழமை வாய்ந்த சர்வதேச நிறுவனத்தில் இணைந்திடுங்கள்

நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டவரா? உங்களுக்கே சொந்தமான வாகனம், வீடு, உலகம் முழுவதும் வலம் வரும் வாய்ப்பு. மற்றும் உங்களின் கனவுகளை குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யும் விடாமுயற்சி இருப்பின் எம்முடன் AIA வெல்த் பிளானராக கைகோர்த்து நீங்கள் விரும்பிய அளவு சம்பாதிக்கும் திறனுக்கு உங்களை பலப்படுத்திக் கொள்ளுங்கள்.

* பகுதிநேரம் வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்க முடியும்
* ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

உங்கள் பயணத்தை இப்பொழுதே ஆரம்பியுங்கள்...

AIA
12/6, Stanley Road, Jaffna.
T.P.No: 076 285 5601 (9021)



## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536 (C-6559)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.